பல்சுவை மாத இதழ்

# மித்ரா டைம்ஸ்

# MITRA TIMES

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்
Tamil & English Monthly

ஆண்டு–6 Volume - 6 | இதழ்–05 Issue - 05 | அக். – 2020 Oct. - 2020 | விலை ரூ.20/– Price Rs.20/- | ஆண்டு சந்தா ரூ.240/– Annual Subscription Rs.240/-



காந்தியாரும் காமராஜரும்!
● ஆசிரியர் கடிதம்

அடுத்த வருஷம் 'அண்ணாத்தே' அரசியலுக்கு வருவார்!
● பிரபல ஜோதிடர் பரணிதரன் கணிப்பு

தொழில் முனைவோருக்கு வழி காட்டும் இளைஞர் லோகேஷ்..!

எஸ்.பி.பி. பற்றி எம்.ஜி.ஆர்.!

## தமிழக சட்டமன்றத்தேர்தல்

# கட்சிகள் போடும் கணக்கு!




# வாங்க விவசாயம் பண்ணலாம்! நானும் விவசாயிதான்!

இந்தியாவின் முதுகெலும்பு கிராமம்தான் என்றார் மகாத்மா காந்தியடிகள். அந்த கிராமங்களின் அடையாளமே விவசாயம்தான். கொரானா தொற்றுக்காலத்திலும் விவசாயிகள் தங்கள் உழைப்பின் வழியால் மக்களுக்கு உணவுகள் தட்டுப்பாடின்றி கிடைக்கச்செய்தனர்.

பெருமைமிகு விவசாயத்தில் மேலும் புதுமையாக விவசாயிகளைக் கொண்டு, விவசாயிகளால், விவசாயிகளுக்கு உருவாக்கப்பட இருக்கும் திட்டம்தான் ***"MITRA AGRICULTURE VILLAGE".***

## இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்:

- விளைச்சலை அதிகரிக்கச் செய்யும் வகையில் வேளாண்மையில் புதுமை புகுத்தப்படும்.
- அனைத்து வகையான உணவுப்பொருட்கள், பால் பண்ணை, மாட்டுப்பண்ணை, மீன் பண்ணை அமைக்கப்படும். அதற்குரிய ஆட்கள் கிராமத்தில் தேர்வு செய்யப்படுவார்கள்.
- விவசாயிகள் தனக்கு தேவையான வசதிகளுக்கு எங்கும் செல்ல வேண்டாம்.அவர்களுக்கு தேவையான சித்த, ஆயுர்வேத, யுனானி, ஆங்கில மருத்துவம் கொண்ட மருத்துவமனை அமைக்கப்படும்.
- விவசாயிகளின் பிள்ளைகள் படிக்க பள்ளிக்கூடம் உருவாக்கப்படும். உயர்கல்விவரை வழங்கப்படும்.
- விவசாயிகளின் விளைப் பொருட்கள் உரிய முறையில் பாதுகாக்க கிடங்குகள் அமைக்கப்படும்.

**இந்த கிராமத்தில் நீங்களும் குடியேறுங்கள்.**
**மித்ரா குழுமத்தோடு இணைந்து வாழ்க்கையை இனிமையாக்கிக் கொள்வோம்!**

உங்களிடமோ உங்களுக்கு தெரிந்தவர்களிடமோ இந்த கிராமத்தை அமைப்பதற்கு நிலங்கள் இருந்தால் அணுகவும். அங்கேயும் இதுபோன்ற கிராமம் அமைத்துத் தரப்படும்.

தொடர்புக்கு: எண்.001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ, 9, சூளைமேடு ஹைரோடு, சென்னை – 94.
போன்: **044-23744661, 2374300718, 8248585067**

# மித்ரா டைம்ஸ்

மித்ரா –06 அக்டோபர் 2020 டைம்ஸ்–05

அச்சிட்டு வெளியிடுபவர் – ஆசிரியர்

**எம்.எஸ்.மூர்த்தி**

நிர்வாக ஆசிரியர்

திருமதி. **சுஜாதா மூர்த்தி**

செய்தி ஆசிரியர்

மணவூர் **கி.விடாரண்யம்** பி.ஏ.,பி.ஜி.எல்.,

9789837069, 9962177865

இதழ் சிறப்பு ஆலோசகர்

**கவிஞர் பாரதி சுகுமாறன்**

**(தமிழக அரசின் பாரதியார் விருதாளர்)**

நிர்வாக ஆலோசகர்

**ஆர்.குணசேகரன்**

செய்தி இணை ஆசிரியர்கள்

**பெரும்பாக்கம் அருண்** – 9094447057

**சக்தி வி.சேதுபதி** – 8778473634

**ஆ.சதீஷ்குமார்**

**வி.பிரகாஷ்**

நிர்வாக மேலாளர்

**ச.அகிலன்**

இணையதள செய்தியாளர்

**எஸ்.சுருதிலட்சுமி** பி.எஸ்சி.,

சட்ட ஆலோசகர்

**வி.என்.பிரசாத்** எம்.ஏ.,பி.எல்.,

வடிவமைப்பு

**அர்ஷ் டிசைன் மீடியா** – 8190962034

விளம்பரம், சந்தா தொடர்புக்கு

திருமதி. **நிரோஷா திலிப்**

044-23743007 / 8



**அலுவலகம்:**

001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யு,

9, சூளைமேடு ஹைரோடு, சென்னை – 94.

தொடர்பு: 044-23744661, 2374300718

8248585067

mitratimes2015@gmail.com

www.mitratimes.com


# உள்ளே...


காந்தியாரும், காமராஜரும்!........................................04

வழக்கறிஞர் பா.ஹேமலதா........................................06

எண்ணமே சொல்; சொல்லே செயல்;
செயலே வாழ்க்கை!........................................08

எம் பதில்கள்........................................10

The Necessity of Immunity........................................12

பெருமைமிகு தமிழகம்!........................................13

இப்போதே பழகிக்கொள்ளுங்கள்!........................................14

Real Peace Only in Our Mind........................................15

கன்னிமாரா அதிசய மரம்!........................................16

தந்தையை போற்றுங்கள்!........................................17

மற்றவர் மதிக்க வாழ்வோம்!........................................18

இந்த உறவுகள் இனி இருக்குமா?........................................20

கடற்படை போர்க்கப்பல்களில் பெண் அதிகாரிகள்!...22

காலத்துக்கும் பொருந்தும் கண்ணதாசன் பாடல்கள்!..23

எஸ்.பி.பியும் எம்.ஜி.ஆரும்!........................................24

மித்ரா டாக்கீஸ்!........................................26

தொழில் முனைவோருக்கு வழி காட்டும்
இளைஞர் லோகேஷ்..!........................................28

எதிர்பார்ப்பை குறைத்துக் கொண்டால் திருமணம்
எளிதில் முடியும்!........................................32

நலம் தரும் நல்லம்பாக்கம் சொர்ணலிங்கேஷ்வர்!......34

திறமை யாருக்கும் இருக்கும்!........................................35

கொரானா வரும்முன் காப்போம்!........................................36

தமிழக சட்டமன்றத் தேர்தல்...
கட்சிகள் போடும் கணக்கு..!........................................40

கபாலிகான் நியூஸ்........................................44

அடுத்த வருஷம் ‘அண்ணாத்தே’
அரசியலுக்கு வருவார்!........................................46

ஆசை அளவோடு!........................................50

# காந்தியாரும், காமராஜரும்!



என் எண்ணம்

அன்புடையீர், வணக்கம்.

இந்திய சுதந்திரத்திற்கு பாடுபட்டவர் மகாத்மா காந்தியடிகள். தமிழகத்தின் தனிப்பெரும் தலைவர் பெருந்தலைவர் காமராஜர். காந்தியாரின் பிறந்தநாளான அக்டோபர் 2ந் தேதியன்றே உயிர் நீத்தவர் காமராஜர். வழிகாட்டிகளை விட வாழ்ந்து காட்டிகள் உன்னதமானவர்கள். காந்தி உயரிய வாழ்ந்து காட்டியாகத் திகழ்ந்தவர்.

உலகின் தலைசிறந்த தலைவர்களுள் முதன்மையானவராய் நம் காந்தியடிகள் கருதபடுவதற்குக் காரணம், வார்த்தைக்கும் வாழ்க்கைக்கும் வேறுபாடு இல்லாமல் வாழ்ந்தவர் அவர் என்பதே. காந்தி வழியில் வாழ்ந்து காந்தியத்தின் உன்னதத்தை உணர்த்தி 'தென்நாட்டு காந்தி' என்று மக்களால் போற்றப்படுபவர் கர்மவீரர் காமராஜர்.


அக்டோபர் 2 ஆம் நாள் காந்தியடிகள் பிறந்தநாள், அதேநாள் தான் காமராஜர் மறைந்த நாள். நாளில் மட்டுமா ஒற்றுமை? கொள்கையில், தனிமனித வாழ்க்கையில், நேர்மையில் என்று எல்லாவற்றிலும் இருவருக்குள்ளும் ஒற்றுமைகள் இருந்தன.


காந்தி ராட்டையைச் சாட்டையாக்கி ஆங்கிலேருக்கு எதிராகப் புதியதோர் ஆயுதம் செய்தார். அவர் சிறுவயது வாழ்க்கை, சோகங்கள் நிறைந்தது. பதின்மூன்று வயதில் கஸ்தூரிபாயை மணக்கக் காலம் அவரை நிர்பந்திக்கிறது. பதினாறு வயதில் தந்தையை இழந்த மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியை, உயர்ந்த லட்சியமுள்ள இளைஞனாய் மாற்றியவர் அன்னையார் புத்திலிபாய் தான். பதினெட்டு வயதில் வழக்கறிஞர் படிப்பிற்காக இங்கிலாந்திற்கு சென்ற போது தாயாருக்குத் தந்த சத்தியத்தின் படி வாழ்நாள் முழுக்கத் தனி மனித ஒழுக்கத்தைக் கடைபிடித்தார்.

காமராஜரும் ஆறுவயதில், தந்தை குமாரசாமி நாடாரை இழக்கிறார். தாயார் சிவகாமி அம்மையாரின் அன்பில் வளர்ந்தார். குழந்தைப் பருவத்தில் காந்தியும், காமராஜரும் தந்தையின் அன்பின்றித் தாயின் அன்பில் வாழக் காலம் பணித்தது.

காமராஜர் முதலமைச்சரான பின்னும் தாய் சிவகாமி அம்மையாருக்குச் செலவுக்கு ரூ.120 தான் அனுப்பினார். 'வருகிறவர்களுக்குக் குளிர்பானம் வாங்கித் தர வேண்டும், ரூ.150 தந்தால் நலம்' என்று தாய் வேண்டிய போதும் மறுத்தவர் காமராஜர். உப்புக்கு வரி விதித்த ஆங்கிலேய ஏகாதிபத்திய அரசுக்கு எதிராக காந்தி நடத்திய தண்டி யாத்திரை அவரது மன உறுதிக்குச் சான்று. 1930-ல் காந்தி அறிவித்த உப்புச் சத்தியாகிரகத்தில் ராஜாஜியோடு வேதாரண்யத்தில் பங்கேற்று சிறை சென்றார் காமராஜர்.

தனிவாழ்விலும் பொதுவாழ்விலும் அறத்தைக் கடைபிடிக்க வேண்டும் என்று போதித்த காந்தி, தென்னாப்பிரிக்கா சென்று திரும்பிய பின் எளிய கதர் வேட்டிக்கு





மாறினார். வாரம் ஒரு நாள் பேசா விரதம் மேற்கொண்டார். ஆங்கிலேயரின் துப்பாக்கிகளும் பீரங்கிகளும் அவரின் அகிம்சை முன் செயலற்றுப் போயின.

இந்தியா சுதந்திரம் பெற்ற போது, பதவியை நாடாமல் இந்துமுஸ்லிம் ஒற்றுமைக்குப் பாடுபட்டவர் காந்தி. லால்பகதூர் சாஸ்திரியின் மரணத்திற்குப் பின் பிரதமராகும் வாய்ப்பு வந்தும் கூட அதை இந்திராகாந்திக்குத் தருவதற்குக் காரணமாய் இருந்தார் காமராஜர்.

இருவரும் என்றும் பதவியைச் சுகமாய் நினைத்தவர்களில்லை. இந்தியாவின் இதயம் கிராமங்களில் இருக்கிறது என்றார் காந்தி. 1957 முதல் அனைவருக்கும் இலவசக் கல்வி தரும் பொருட்டு கிராமங்கள் தோறும் பள்ளிகள் அமைத்து மதிய உணவு தந்து கல்விக்கண் திறந்த ஒப்பற்ற காந்தியத் தலைவனாகக் காமராஜர் மனிதநேயநெறியை இருவரும் தம் வாழ்வின் அறமாகக் கொண்டவர்கள். பள்ளிக்குச் செல்லும் வயதில் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த சிறுவன், காமராஜரைப் பெரிதும் பாதித்ததன் விளைவாக, உலகம் போற்றும் மதியஉணவுத் திட்டத்தைத் தொடங்கிவைத்தார்.

சம்பரானில் கஸ்தூரிபாவோடு பயணித்துக் கொண்டிருந்தபோது அழுக்கு உடையோடு குழந்தைகள் பிச்சை எடுத்துக் கொண்டிருப்பதை காந்திஜி பார்க்கிறார். “கஸ்தூரிபா... இவர்கள் அழுக்கோடு மாற்று உடை இல்லாமல் இருப்பது உனக்கு உறுத்தவில்லையா?

நீ ஏன் இவர்களை நீராடவைத்து தூய்மையான உடையணிவித்து பாடம் சொல்லிக் கொடுக்கக் கூடாது?” என்று கேட்டார். காந்திஜி சொன்னபடி வாழ்க்கை முழுக்க கஸ்தூரிபா செய்தார்.

மகாத்மாவுக்கு முகஸ்துதி பிடிக்காது. “நாம் சேவை செய்யத்தானே பிறந்திருக்கிறோம். இதில் பெருமைப்பட என்ன இருக்கிறது?” என்று அடிக்கடி சபர்மதி ஆஸ்ரமத்திற்கு வருவோரிடம் கூறுவார்.

காமராஜரும் அப்படியே வாழ்ந்தார். யாரேனும் தன்னைப் பாராட்டிப் பேசினால், “நிறுத்துனேன்... என்னைப் புகழ்ந்து பேசும் நேரத்திலே நல்ல காரியம் எதையாவது செய்யலாமேனேன்” என்பார். முதலமைச்சரானதும் பாதுகாப்புக்கு தன் காருக்கு முன் சைரன் வைத்த கார் சென்றதை விரும்பாதவர்.

இன்னொரு முறை காந்தியடிகளைப்போல், பெருந்தலைவர் காமராஜர் போன்ற தலைவர்கள் இந்தியாவில் பிறப்பார்களா என்று ஏக்கம் நமக்குள் எழாமல் இல்லை.

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்.

(ஒப்பற்றதாகவும், அழிவில்லாததாகவும் இந்த உலகத்தில் நிலைத்திருப்பது புகழைத் தவிர வேறு எதுவுமே இல்லை).

என்ற குறளின் விளக்கத்துக்கு உதாரணமாய் வாழ்ந்தவர்களை போற்றுவோம்! அவர்களின் எண்ணங்களை நெஞ்சில் ஏந்துவோம்!

✍ *எம்.எஸ்.மூர்த்தி*



# வழக்கறிஞர் பா.ஹேமலதா

**இக்கால மக்களின் வாழ்க்கை நிலை ஒவ்வொருவரையும் சட்ட அறிவு பெற வேண்டும் என்பதை வலியுறுத்துவதோடு மட்டும் அல்லாமல் அதற்குரிய பாதையில் பயணிக்க வைக்கிறது, குறிப்பாக பெண்கள் சட்ட அறிவு பெற வேண்டும் என்பதை சமீப காலத்திய பல்வேறு நிகழ்வுகள் நமக்குப் பாடம் புகட்டிக் கொண்டிருக்கிறது என்கிறார் வழக்கறிஞர்.ஹேமலதா.**

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூரைச் சேர்ந்த ஹேமலதா கடந்த 12 ஆண்டுகளாக கிரிமினல் வழக்கறிஞராகவே தன் பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார், இவருடைய தந்தை மூத்த பத்திரிகையாளரான பாரதிசுகுமாரன் என்பதால் சமூகத்தின் மீதான அக்கறை இவரிடம் இயல்பாகவே நிறைந்துள்ளது.

கம்ப்யூட்டர், மருத்துவம் என்று பல்வேறு எளிதான பணி நோக்கி பெண்கள் காலடி எடுத்து வைக்கின்ற போது வழக்கறிஞர் பணியை நீங்கள் தேர்வு செய்தது ஏன்? என்ற கேள்வியை இவர் முன் வைத்தபோது...

கல்லூரிக்கு நான் சென்ற போது.. எம்.பி.ஏ, எம்.காம் என்பதாகவே என்னுடைய விருப்பம் இருந்தது, அதற்காகவே பி.காம் பட்டப்படிப்பை தேர்வு செய்தேன், கல்லூரிக்கு சென்று வந்து கொண்டிருந்த போதுதான் சில அனுபவங்கள், அடித்தட்டு மக்களில் பலர், வசதி படைத்தவர்களால் சங்கடத்திற்கு ஆளாகி என் தந்தையைத் தேடி வருவார்கள், அவர்களுக்கு வேண்டிய நியாயமான உதவியை என்னுடைய தந்தை செய்து கொடுப்பார், அதில் ஒரு சிலருக்கு சட்ட ரீதியாகவும் உதவி தேவைப்பட்டது, அவர்களின் அவல நிலை, வறுமை எல்லாம் தெரிந்த போது இத்தகைய மக்களுக்காக நாம் சட்டம் படித்து சமூக சேவையாற்றினால் என்ன என்று யோசித்தேன், அந்த யோசனையை என் குடும்பத்தினரிடம் சொன்ன போது அவர்களும் இசைவளித்தார்கள்.

பி.காம் முடித்ததும் மூன்றாண்டு பி.எல்.சேர்ந்தேன், முடித்து விட்டு பார் கவுன்சிலில் பதிவு பெற்று வெளியே வந்த போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஐடியா கொடுத்தார்கள், பெண்களுக்கு சிவில் சைட்தான் சரியாக இருக்கும் என்பதே பலரின் கருத்தாகவும் இருந்தது, நான் சட்டம் படித்ததற்கு மூல காரணமே சட்ட உதவி கிடைக்காமல் சங்கடத்திற்கு ஆளாகி வந்தவர்களுக்கு உதவி புரிய வேண்டும்

# உன்னால் முடியும் பெண்ணே!

என்பதற்காகத்தான், அதனால் பிரபல கிரிமினல் லாயர் துரைப்பாண்டியன் அவர்களிடம் ஜூனியராக இணைந்தேன்.

பெண்களுக்கு கிரிமினல் லாயர் பணி ஏற்றதா? என்றோம்...

பெண்களுக்கு எல்லாவிதமான பணியுமே ஏற்றதுதான், நேற்றுவரை கடினமானப் பணி என்று கூறப்பட்ட ராணுவம் மற்றும் காவல்துறையில் கூட, ஏன், கனரக வாகனங்களை ஓட்டும் பணியில் கூட இன்று பெண்கள் சாதிக்க ஆரம்பித்து விட்டனர், புலனாய்வுப் பத்திரிகையாளர்களாகவும் பல



பெண்கள் வெற்றிக்கொடி நாட்டி வருகின்றனர், இந்த நிலையில் சட்ட அறிவும், ஒட்டுமொத்த வழக்கறிஞர்களின் பக்க பலமும் பாதுகாப்பும் நிறைந்த வழக்கறிஞர் பணியில் நியாயத்திற்காகப் போராட நாம் ஏன் அச்சப்பட வேண்டும்,

கிரிமினல் லாயர்களாக இருப்பவர்கள் காவல்துறையை பகைத்துக் கொள்ள வேண்டி இருக்குமே? என்றோம்...

காவல் துறையினர் யார்? அவர்களும் மனிதர்கள்தானே.. ஒரு பிரச்னையை நாம் எப்படி கொண்டு செல்கிறோம் என்பதில்தான் நமக்கும் அவர்களுக்குமான உறவு இருக்கிறது, பொதுவாக எல்லா துறைகளிலுமே நல்லவர்களும் உண்டு கெட்டவர்களும் உண்டு, காவல் துறையிலும் அதேபோல்தான் அங்கும் பல மனிதாபிமானிகள் இருக்கின்றனர், அதற்கும் மேலாக அவர்கள் தவறு செய்தால் தவறு செய்பவரை கூண்டில் நிறுத்த சட்டத்தில் இடமிருக்கு.

பிரச்னைகளில் இருந்து அப்பாவிகளை மீட்டெடுப்பதே ஒரு வழக்கறிஞரின் பணி, அந்த வகையில் பாதிக்கப்பட்டு என்னிடம் வருபவர்களுக்கு, பேசி தீர்க்க வேண்டியவற்றை பேசித் தீர்த்தும், வழக்காட வேண்டியவற்றை வழக்காடியும் நீதி கிடைத்திட உதவி வருகிறேன்.

பெரும்பாலான பெண் வழக்கறிஞர்கள் சிவில் பக்கம் சென்றுவிட்ட நிலையிலும் 12 ஆண்டுகளாக கிரிமினல் வழக்கறிஞராகவே பணியாற்றி வருகிறேன்.

சில பொதுநல அமைப்புகளில் ஆலோசகராகவும், பாதிக்கப் படும் பெண்களுக்காக போராடும் அமைப்புகளுடனும் இணைந்து தொடர்ந்து பணியாற்றி வருகிறேன், இன்றுள்ள சூழலில் ஒரு பக்கம் பெண்ணுரிமை, சமத்துவம் என்று நாம் பேசிக் கொண்டிருந்தாலும் பெண்களின் சுதந்திரம் என்பது இன்றுவரை கேள்விக் குறியாகவேத்தான் உள்ளது, பெண்கள் மீதான தாக்குதலும் பாலியல் வன்கொடுமைகளும் ஒரு பக்கம் தொடர்ந்து கொண்டுதான் உள்ளது.

இந்த நிலையில் பாதிக்கப் பட்டவர்களுக்குரிய உரிமையை, அவர்களுக்குரிய பாதுகாப்பை வழக்கறிஞர்களால்தான் பெற்றுத்தர முடியும் என்பதால் இந்த வழக்கறிஞர் பணியை என் மூச்சாகவே கொண்டுள்ளேன்" என்கிறார் வழக்கறிஞர் ஹேமலதா.

✍ *எம்.எஸ்.மூர்த்தி*

# எண்ணமே சொல்; சொல்லே செயல்; செயலே வாழ்க்கை!

## எழுத்தாளர் சு.ஜெயகுமாரி

**தன்னம்பிக்கை என்ற எண்ணம் தோன்றுவதற்கு முன் அதன் மீது ஒரு அடிப்படை நம்பிக்கை நமக்குள் வேண்டும், அந்த நம்பிக்கைதான் தன்னம்பிக்கையாகும்.**

அது இறை நம்பிக்கையாகவோ, இயற்கை நம்பிக்கையாகவோ, அல்லது இயற்பியல் நம்பிக்கையாகவும் கூட இருக்கலாம்.

ஏதேனும் ஒன்று நம் தன்னம்பிக்கைக்கைக்கு அடிப்படையாக வேண்டும்... ஒவ்வொரு அடிப்படை நம்பிக்கைகளையும் பார்ப்போம்....

முதலில் இயற்பியல் நம்பிக்கை, இயற்பியல் நம்பிக்கை என்றால்...

அதன் அடிப்படை விதிகளும் மற்றும் ஆரம்ப அறிவியலும் இயல்பாகவே புரிய வேண்டும், இதைச் செய்தால் இது விளையும் என்கின்ற அடிப்படை.....

இதுதான் அந்த அடிப்படை ஆதார விதி...

இப்படிப்பட்ட இயற்பியல் விதி துல்லியக் கணக்காய் இயல்பாகவே வருகிறது எனில் அந்த நம்பிக்கையுடன் கூடிய தன்னம்பிக்கை எப்போதும் வெற்றியைத் தரும்....

அடுத்ததாக இயற்கை நம்பிக்கை என்பது நம் சுற்றுப்புற சூழலுடன் ஒருங்கிணைந்து வாழுகின்ற உடலாலும், மனதாலும், ஆன்மாவினாலும் இயற்கையோடு ஒன்றி வாழுகின்ற ஒரு அடிப்படை அறிவு...

இந்த இயற்கை அறிவு எல்லா ஜீவராசிகளுக்கும் மனிதன் உட்பட மிகுதியாகவே இருந்தது, ஆனால் பல செயல்கள் மூலமாக செயற்கை வாழ்வியல் மூலமாக அந்த இயற்கை அறநெறிகள் என்பதை



கற்றுக் கொள்ளும் பக்குவமும் ஏற்றுக்கொள்ளும் பக்குவமும் மனித உடலில் இருந்து அழிந்து போய்விட்டது என்று தான் கூற வேண்டும்.....

இயற்கை முறையிலான நம்பிக்கையை அடிப்படையாக வைத்து நம் ஒவ்வொருவரின் தன்னம்பிக்கையையும் மேம்படுத்த வேண்டும் எனில் இயற்கை அழிவு, இயற்கை சூழல், இயற்கை வாழ்வியல், நமக்கு மிக மிக அவசியமாக வேண்டியிருக்கிறது....

அடுத்ததாக இறை நம்பிக்கையுடன் கூடிய தன்னம்பிக்கை.... நாமெல்லாம் மனிதர்கள்தானே, அடுத்த நிமிடம் நடப்பதை முழுவதும் கூற இயலாதவர்கள் தாமே, ஆகவே நமக்குள் ...எல்லாம் வல்ல இறை நம்பிக்கையை அடிப்படையாக வைத்து உண்டாகும் தன்னம்பிக்கை மிகுதியான நற்பலன்களை இந்த காலக்கட்டத்தில் தரக்கூடும்... இறை நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட தன்னம்பிக்கை, 1.உளவியல் ரீதியான வடிகாலாகவும்2.உடல்நலம்சார்ந்தஒழுங்காகவும் 3.தனி மனித அறம் சார்ந்த விழுமியமாகவும், தனி மனிதனிடம் தன்னம்பிக்கை விஸ்வரூபம் கொள்கிறது... நான் செய்த இந்தச் செயல் சரி என்கின்ற தன்னம்பிக்கையும், இறையாற்றல் இதற்கு எனக்கு துணை புரியும் என்கின்ற அடிப்படையான நம்பிக்கையும் மனித குண நலன்களை மேம்படுத்தும்.....

ஆகவே மிகச் சுலபமாக கூறுவதென்றால் ஒருவருக்குள் தன்னம்பிக்கையை விளைவிக்கும் ஆயுதங்களில் சொற்களும், பிற மனிதர்களின் செயல்பாடுகளும் மிக முக்கிய காரணிகளாகவே திகழ்கின்றன...

சொற்கள் போன்ற ஆயுதம் மனித குலத்தில் பிறிதொன்று இல்லவே இல்லை எனலாம்... தன்னம்பிக்கை தரும் சொற்கள், தன் நம்பிக்கையை தகர்க்கும் வகைகள் என ஒரு சொல் மிக முக்கியமான பங்காற்றுகிறது அனைவரின் வாழ்விலும்.

ஒரு கணம் யோசித்த பின் வரும் சொற்கள் பல மரணங்களைத் தடுத்து விடும்...

ஒருவரின் தன்னம்பிக்கையைத் தகர்க்கும் வார்த்தைகளைப் பேசி கேலி என்றோ, கிண்டல் என்றோ சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன் என்றோ பொறுப்பற்று பேசும் நபர்களால் பல மனச்சிதைவுகளும், தன்னம்பிக்கைத் தகர்வுகளும் நிகழ்கின்றன.

ஒரே ஒரு வார்த்தையைத் தாங்க மாட்டாயா... இவ்வளவுதானா உன் மன உறுதியும் தன்னம்பிக்கையும் என்று கேட்பவர்களுக்கு நல்ல வார்த்தைகளை நல்ல கோணத்தில் பேசத் தெரியாமல் எதிராளியை குறை கூறுவது இன்னும் அசிங்கமான செயல் என்று நமக்குத் தெரியும் என்பதால் பிறர் மனம் வருந்தும் வார்த்தைகளைப் பேசுவோர் அதே வார்த்தைகளை ஏழேழுப் பிறவிகளுக்கும் கேட்க நேரிடும் என்கிறது கருடப் புராணம்.

நாம் ஒருவரை நோக்கி கூறும் சொற்களை வேறு ஒருவர் நம்மை நோக்கிக் கூறினால் என்னவாகும் என்பதை உணர வேண்டும்...

இனிதான, கனிபோன்ற வார்த்தைகளை விட்டு, கசக்கும் காய் வார்த்தைகளை உண்ணுவாயா என்று கடந்த இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக நம் தலையில் தட்டிக் கொண்டிருக்கிறார் வள்ளுவர் பெருமான்.

எனவே, ஒருவருக்குள் தன்னம்பிக்கையை உருவாக்குகிறோம் என்கின்ற மேலான கடமை உணர்வுடன் நாம் சொற்களைப் பயன் படுத்திட வேண்டும்... அத்தகைய கல்வியும் நமக்கு வேண்டும்...

அடுத்ததாக செயல்... ஒவ்வொருவரின் ஒவ்வொரு செயலும் யாரோ இன்னொருவரின் வாழ்க்கையோடு தொடர்பு கொண்டதுதான்...

நாம் செய்யும் செயல் மீது போதிய கவனம் வைத்து நம் செயல்களை ஒழுங்குப் படுத்துவது ஒன்றே சமூக நலனைப் பாதுகாக்கும் முக்கிய அம்சம் ஆகும்...

எண்ணம்... சொல்..செயல் மூன்றும் ஒவ்வொரு மனிதனின் வாழ்வையும் நகர்த்திச் செல்லும் சக்கரங்களாகும்...

உண்மை இத்தகையதாக இருப்பதால், அவை வெளிப்படும் விதமே மனிதர்களின் தன்னம்பிக்கையை, வருங்கால வாழ்க்கையைக் காட்டுகின்ற சக்தியாக இருக்கும்.

தன்னம்பிக்கை அற்று பேசும் மனிதர்களிடம் இருந்து விலகுவது அவர்களின் நட்பும் சுற்றமும் மட்டும் அல்ல, அவர்களின் ஆரோக்கியமும் செல்வமும் கூட அவர்களை அறியாமலேயே அவர்களை விட்டு விலகி விடும்.

எனவே.. தன்னம்பிக்கை கொள்வோம்.. அதன் மீதான நம்பிக்கை கொண்ட மனிதராய் வாழ்வோம். ■




*அடல் சுரங்கப் பாதை பற்றி...*

அதிக பனிப் பொழிவு காரணமாக ரோட்டாங் கணவாய் ஆண்டுக்கு 5 மாத காலம் குளிர் காலத்தில் மூடப்படுவதால் இமாச்சல பிரதேசத்தில் உள்ள லஹெளல் பள்ளத்தாக்கு வெளியுலகுடன் அதிக போக்குவரத்து தொடர்பு எதுவும் இல்லாமல் இருக்கும்.

1999ஆம் ஆண்டு கார்கில் போர் முடிந்த பின்பு வாஜ்பேயி இந்த பள்ளத்தாக்கில் உடனடியாக சுரங்கப்பாதை அமைக்க ஒப்புக் கொண்டார் .

பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் பொறுப்பேற்றவுடனே வாஜ்பாய் பெயரை இந்த சுரங்கபாதைக்கு சூட்டி வேலையை துரிதப்படுத்தி 3ந்தேதி திறந்து வைத்தார்.

அடல் சுரங்கப் பாதை, 10, ஆயிரம் அடி உயரத்திற்கு மேலே அமைக்கப்பட்ட உலகின் மிக நீளமான நெடுஞ்சாலை சுரங்கப்பாதையாகும். மொத்த நீளம் 9.02 கி.மீ.

இப்பாதை காரணமாக, சுற்றி செல்ல வேண்டிய அவசியம் இல்லாததால், மணாலிலே இடையிலான தூரம் 46 கி.மீ. குறையும். பயண நேரம் 5 மணி நேரம் குறையும்.

சீனாவுடனான உண்மை எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டுக்கு விரைந்து செல்ல இந்த பாதை உதவும். இந்த சுரங்கப்பாதையில், ஒவ்வொரு, 60 மீட்டர் இடைவெளியில் தீயணைப்பு கருவிகள் வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு 250 மீட்டர் இடைவெளியில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு உள்ளன. ஒவ்வொரு, 500 மீட்டர் தூரத்திலும், அவசர கால வெளியேறும் வழி அமைந்துள்ளது.

உலகத்திலேயே நீளமான சுரங்கப்பாதை என்ற பெருமை இதற்கு உண்டு என்பதால் ஒரு இந்தியனாக நமக்கும் பெருமை.

***அமெரிக்க அதிபர் தேர்தல் பிரச்சாரத்தில் தனிநபர் தாக்குதலை கவனித்தீர்களா?***

இந்தியா போன்ற ஜனநாயகத்தை பாதுகாக்கும் நாட்டில் தேர்தல் பிரச்சாரத்தில் பொதுக்கூட்டங்களில் ஒருவரையொருவர் தனி நபர் தாக்குதல் நடப்பது தெரியும்.

ஆனால் போட்டியிடும் வேட்பாளர்களே நேருக்கு நேர் விவாதம் நடத்தி வாக்கு கேட்கும் முறையில் கூட தனிநபர் தாக்குதல் நடந்துள்ளது. அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் 3 முறை நேருக்கு நேர் விவாதம் செய்து தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவது வழக்கமாக இருந்து வருகிறது. அந்த வகையில், நவம்பர் 3ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில், முதலாவது விவாத நிகழ்ச்சி நடைபெற்றது. அமெரிக்காவில் கேஸ் வெஸ்டர்ன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியை பிரபல தொலைக்காட்சி நெறியாளர் கிரீஸ் வேலஸ் தொகுத்து வழங்கினார்.

விவாதத்தில் பங்கேற்ற தற்போதைய அதிபரும், குடியரசு கட்சியின் வேட்பாளருமான டிரம்பும் ஜனநாயக கட்சி வேட்பாளர் ஜோ பிடனும் பலமுறை தனிநபர் தாக்குதலில் ஈடுபட்டனர். கொரோனாவை கட்டுப்படுத்த டிரம்ப் தவறிவிட்டதாக ஜோ பிடன் குற்றம்சாட்டிய போது, இத்தகைய பணியாற்றும் சக்தி உங்கள் ரத்தத்திலேயே இல்லை என்று கோபத்துடன் சாடினார் டிரம்ப்.

முகக்கவசம் பற்றிய விவாதம் நடைபெற்ற போது கோட்டில் இருந்து முகக்கவசத்தை

எடுத்துக்காட்டிய டிரம்ப், ஜோ பிடனை போல மிகப்பெரிய முகக்கவசத்தை தாம் அணியவில்லை என்றார்.

தாம் ஒரு சிறந்த அதிபர் என்று டிரம்ப் பெருமிதம் தெரிவித்த போது அமெரிக்கா இதுவரை சந்தித்திராத மிக மோசமான அதிபர் நீங்கள்தான் என்று ஜோ பிடன் நேரடியாக குற்றம்சாட்டினார். இருவருக்கும் இடையே வாக்குவாதம் முற்றியபோது, ஒருகட்டத்தில் ஆவேசமடைந்த ஜோ பிடன் வாயை மூடுங்கள் என்று டிரம்பை நேரடியாக விமர்சித்தார். அமெரிக்கர்கள் அனைவரும் அறிவார்கள் டிரம்ப் மிகப்பெரிய பொய்யர் என்று ஜோ பிடன் தெரிவித்தார்.

### *உத்திரப்பிரதேச சம்பவம்...*

மனதை உலுக்கிய சம்பவம்..பெண்களின் பாதுகாப்பு குறித்த மகாத்மா காந்தியின் பிறந்தநாள் கொண்டாடும் வேளையில் நடந்திருக்கிறது.

உ.பி.யின் மேற்குப் பகுதியில் டெல்லிக்கு மிக அருகாமையில் இருக்கும் சிறிய மாவட்டம் ஹாத்தரஸ். இதன் கிராமங்களில் ஒன்றான சண்ட்பாவை சேர்ந்த 19 வயது தலித் இளம்பெண், சம்பவம் நடந்த அன்று வயல்வெளியில் வேலை செய்து கொண்டிருந்தார்.

அப்போது அங்கு வந்த அவரது கிராமத்தின் உயர்குடி சமூகத்தின் 4 இளைஞர்கள் அந்த இளம்பெண்ணை தூக்கிச் சென்றனர். இது, அருகிலுள்ள வயலில் சற்று தூரத்தில் இருந்த அவரது தாய்க்கும் தெரியாமல் இருந்துள்ளது.

மற்றொரு வயலில் இருந்த வீட்டில் அப்பெண்ணை கூட்டு பலாத்காரம் செய்தவர்கள் கடுமையாகத் தாக்கி உள்ளனர். பிறகு உண்மை வெளியில் தெரியாமல் இருக்க பெண்ணின் நாக்கை வெளியில் இழுத்து துண்டித்துள்ளனர். இந்த சம்பவம் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

### *கிராம சபை ரத்து பண்ணது பற்றி...*

தமிழகத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ஆண்டுதோறும் ஜனவரி 26 குடியரசுதினம். மே 1தொழிலாளர் தினம், ஆகஸ்ட் 15 சுதந்திரதினம், அக்டோபர் 2 காந்தி பிறந்தநாள்ஆகிய நான்கு நாள்கள் கிராமசபை கூட்டம் நடத்தப்பட வேண்டும். இது மட்டுமல்லாமல் சிறப்புகிராமசபையும் நடைபெறும்.

பஞ்சாயத்து ராஜ் சட்டம் கிராமப் பஞ்சாயத்துகளில் உள்ள மக்களுக்கு ஒரு தனிச்சிறப்பான அதிகாரத்தை வழங்கியுள்ளது. அது கிராம சபை எனும் சக்தி. சட்டத்தை இயற்றும் அதிகாரமிக்க சட்டமன்றங்களிலும் நாடாளுமன்ற அவைகளிலும் உறுப்பினர்கள்தான் விவாதிக்க முடியுமே தவிர, குடிமக்கள் அவற்றில் பங்கேற்க முடியாது. ஆனால், தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் ஊராட்சி மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைக் கேள்வி கேட்கும் அதிகாரத்தை மக்களுக்கு வழங்கியுள்ளது பஞ்சாயத்து ராஜ் சட்டம். நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மட்டுமல்ல, செய்த வேலைகளை, செய்யவுள்ள வேலைகளையும் பரிசீலனைக்கு உட்படுத்தும் அதிகாரத்தையும் வழங்கியுள்ளது.

கிராமத்தில் செய்யப்படும் ஒவ்வொரு ரூபாய் செலவும் கிராம சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். செய்யப்பட்ட, செய்யப்படும் ஒவ்வொரு வேலையும், திட்டமும் கிராம சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். தமது பஞ்சாயத்துப் பகுதியில் மக்களுக்காக என்னென்ன புதிய திட்டம் தேவை, என்னென்ன வேலைகள் வேண்டும் என்றெல்லாம் கிராம சபையில் தீர்மானம் நிறைவேற்ற முடியும். அவற்றைச் செய்யுமாறு ஊராட்சி ஆணையரையும், மாவட்ட ஆட்சியரையும் கேட்க முடியும். ஏன் செய்து தரவில்லை என்று காரணமும் கேட்க முடியும். அவர்களும் விளக்கம் அளித்தாக வேண்டும். இத்தகைய அதிகாரங்களைக் கொண்டிருக்கும் கிராம சபை, அதைவிட உச்சமாக ஊராட்சி மன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தை நிராகரிக்கும் அதிகாரத்தையும் பெற்றிருக்கிறது

புதிதாக ஊராட்சி நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு கொரானாவால் கிராமசபை நடத்தமுடியவில்லை. அக்டோபர் 2ந்தேதி கண்டிப்பாக கிராமசபை கூட்டம் நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்ட நிலையில் கொரானாவை காரணம் காட்டி தமிழக அரசு கிராமசபை கூட்டத்தை ரத்து செய்திருக்கிறது.

"எங்கள் தலைவர் வேளாண்சட்டத்திற்கு எதிராக தீர்மானம் போடச் சொன்னார்.அதை தவிர்க்கவே கூட்டம் ரத்து செய்யப்பட்டது"என்று தி.மு.க.வினர் சொல்கிறார்கள்.

அதோடு நில்லாமல் தி.மு.க.தலைவர்கள் கிராமசபைக்கூட்டத்தை கூட்டியிருக்கிறார்கள். இதற்கு அரசு அவர்கள் மேல் வழக்குப் போட்டுள்ளது. ■

# The Necessity of Immunity



Concept by
**S.SHRUTHI LAKSHMI**
B.Sc., (Phychology)

The first signs of winter are starting to show around the country and pretty soon it will be time to get the winter woollies out. While we are dusting off our fluffy unicorn slippers, we should also consider how we will protect ourselves against ills and chills this winter. Our immune system can be put under stress at any time of the year, however it is during winter that there is not only a drop in temperature, but a rise in illness. A strong immune system, built before winter arrives, can protect you from illness throughout the year and help you to recover should you catch anything.

Here are our top tips to get your immune system in tip top shape, for a year ahead of good health.

Full of nutrients, anti-inflammatories and antioxidants, a rainbow plate not only looks good, it helps to strengthen the immune system. As more pressure is placed on the immune system, your body needs more nutrients. Fresh fruit and vegetables provide essential nutrients that are important for fighting infections. Choosing multi-coloured seasonal fruit and vegetables that have travelled a smaller distance, will offer a nutrient dense plate for stronger immune support.

Vitamin C is one nutrient that is crucial for a strong immune system. Found in capsicum, kiwifruit and broccoli, vitamin C is a powerful antioxidant that protects the body from free radical damage and boosts the production of our immune cells. Vitamin C also helps our body to absorb iron, which supports oxygen levels in immune cells so that they can function at their best.

Another crucial nutrient needed for a strong immune system is zinc. Found in spinach, pumpkin seeds and mushrooms, zinc is essential to a range of immune cells. Zinc provides our immune system with antiviral support, aids wound repair, and assists the normal growth of cells for their proper functioning.

Regular exercise throughout the year improves cardiovascular health, lowers blood pressure and can help to regulate the immune system. Research suggests regular exercise helps to reduce the number of colds and flus faced each year, not only because it helps to strengthen the immune system, but exercise helps to flush out toxins too.

When you are suffering from an illness however, do not try to push through. Intense exercise can impair your immune system when it is already under pressure. A gentle walk when unwell can help to flush out the lymphatic system and put you back on the road to recovery.

If we do not sleep for long enough each night, not only is our mood and cognition compromised, our immune system is too. It is during sleep that our cells undergo repair, making sleep crucial for everyday function. Aim for 7-9 hours of sleep per night, so that your immune system can work optimally and you can feel your best. If you are having trouble sleeping, magnesium taken as a supplement or in an Epsom salt bath may help to relax your nervous system for a more restorative sleep.

No matter what the stressor, a stressed body or mind affects our health and exhausts our immune system. During times of stress, huge amounts of cortisol is released, which depletes our vitamin C levels. Vitamin C is crucial to our immune system and as we cannot produce it internally, our need for dietary and supplemental vitamin C increases enormously when we are stressed.

While we may not be able to control stressors, we can change how our nervous system responds to them. Work on stress reduction techniques such as yoga, meditation and mindfulness, for a stronger immune system.

Your immune system works all year round to protect you, however it largely goes unnoticed until it is overwhelmed. As we age, the capability of our immune response becomes reduced, and the need for support increases. Taking care of our immune system is not only important so that we minimise the risk of colds and flus during the year, it is also critical for the prevention of more serious diseases. Take care of your immune system and adopt healthy living strategies, so that you can protect your health for a happier, healthier today, and tomorrow.


# பெருமைமிகு தமிழகம்..!



S.JANAKI

உலகில் ஒரு தலை சிறந்த மாநிலத்தை பற்றிய தகவல்:

- இங்கு 9 ஏர்போர்ட் உள்ளது. அதில் 4 இன்டர்நேஷனல் ஏர்போர்ட்.
- சுமார் 36,000+ பெரிய கம்பெனிகள் உள்ளது.
- உலகில் முதல் தோன்றிய மாநகரம் இங்கு தான் உள்ளது.
- உலகில் தங்கம் அதிகமாக விற்பனையாகும் மாநிலம் இதுவே.
- உலகில் உள்ள மிக பெரிய கம்பெனிகள் பலவற்றின் தலைமை நிர்வாக அதிகாரிகள் இந்த மாநிலத்தை சேர்ந்தவர்கள் தான்.
- இந்த மாநிலம் எந்த மாநிலத்தையும் சார்ந்து இல்லை. ஆனால் இந்த தேசமே இந்த மாநிலத்தை சார்ந்து உள்ளது.
- முதல் முறையாக கடல்வழி வணிகம் துவங்கியது இந்த மாநிலம்.
- இமெயில் கண்டுபிடித்து இந்த மாநிலம் தான். இதனால் இந்த உலகம் விரைவாக செயல்பட காரணம்.
- விவசாயம் முதல் வான்வெளி வரை பல அறிஞர்கள் தோன்றியது இந்த மாநிலத்தில் தான்.
- உலக வரைபடம் வரைந்து காட்டியது இந்த மாநிலத்தை சேர்ந்தவர்கள் தான்.
- உலகில் முதல் hydrogen அனு ஆயுதம் இந்த மாநிலத்தில் தான் கண்டுபிடிக்கப்பட்டது.
- உலகில் அதிகமாக இயற்கை வழியில் மின் உற்பத்தி செய்யும் மாநிலம் இதுவே (hydro, wind, solar, Tidel ..ect)
- உலகில் முதல் முறையாக "தாய் மொழியை" உருவாக்கியது இந்த மாநிலமே.
- உலகில் முதல் முறையாக மொழியை தனது பெயராக கொண்ட ஒரே மாநிலம் தமிழ்நாடு. ■









# இப்போதே பழகிக்கொள்ளுங்கள்!

**ஒருவரின் பணி ஓய்வுக்குப் பின் அதாவது 60ஐ கடந்து முதிர்ந்து கடைசி காலம் வரை என்னவெல்லாம் நிகழும் என இப்போதே தெரிந்து வைத்திருப்பது, எது வந்தாலும் அஞ்சாமல் அவற்றை எதிர் கொள்ள உதவும்.**

முதலில் நம் தாத்தா பாட்டிகள் மற்றும் நம் பெற்றோர்கள் ஒருவர் பின் ஒருவராக விடை பெற்றுச் சென்றிருப்பார்கள்... பின் நம்மை ஒத்த வயதுடையவர்கள் எண்ணிக்கையில் குறையத் தொடங்குவார்கள். மிச்சம் இருப்பவர்களில் சிலர் தம்மைத் தாமே பராமரித்துக் கொள்ள சிரமப் படுவார்கள். நமக்கு அடுத்த தலைமுறையினர் தங்கள் வாழ்க்கையிலே அதிக கவனம் செலுத்துவார்கள். உங்கள் மனைவியோ அல்லது கணவரோ உங்களுக்கு முன்னால் காலமானால் அனைத்தும் சூன்யமாகி விட்டது போல் உணர்வீர்கள்.

அதனால் அப்போது தனிமையில் வாழவும், அதையே ஏற்றும், ரசிக்கவும் பழகிக் கொள்ள வேண்டும்

காலப் போக்கில் சொந்த மக்களும் உறவும் சமூகமும் உங்கள் மீது அக்கறை செலுத்தாமல் போகலாம்.

நீங்கள் வாழ்க்கையில் உச்சத்தைத் தொட்டவராக இருப்பினும் எவ்வளவு புகழ் வாய்ந்தவராக இருப்பினும் முதுமை உங்களை ஒரு சராசரி

வயதான மனிதராக மாற்றி விடும். நீங்கள் மெதுவாக குடும்பத்தால் சமூகத்தால் ஓரங்கட்டப் பட்டு மறக்கப் படுவீர்கள்.

உங்கள் இடத்துக்கு மற்றவர்கள் வந்து விட்டதைப் பார்த்து நீங்கள் பொறாமைப் படவோ முணுமுணுக்கவோ செய்யாமல் உங்களை கட்டுப் படுத்திக் கொண்டு வாழ வேண்டும்

அழையா விருந்தாளியாக பல வகை நோய்களும் உடல் உபாதைகளும் உங்களை அண்டும். ஒதுக்கித் தள்ள முடியாத அவைகளுடன் நட்பு கொண்டு வாழ்வதற்கு பழகி கொள்ளவும். உங்கள் உடல் இளமைக் காலத்தில் இருந்தது போலவே இப்போதும் தொல்லையில்லாமல் இயங்கும் என கனவு காணாதீர்கள். அதற்காக அதைப் பற்றியே நினைத்து கவலைப் பட்டுக் கொண்டே இருக்காமல், எல்லாமே சரியாகவே நடக்கும் என்ற மனப்பக்குவம் பெறுங்கள். ஒரு இடத்தில் முடங்கி விடாமல் சுறுசுறுப்பாக இயங்கி உங்கள் நலத்துக்குத் தேவையான உடற் பயிற்சியைப் பெறுங்கள்.

இவை எல்லாவற்றையும் தாண்டி ஒரு நிலை வரும். அப்போது நம்மால் எழுந்து நடமாட முடியாமல் படுக்கையிலேயே இருக்க வேண்டிய நிலை வரலாம். நாம் பிறந்தபோது இருந்தோமே அது போல. ஒரு முக்கிய வித்தியாசம் நாம் குழந்தையாய் இருந்த போது நம்மை அன்போடு சீராட்டி பராமரிக்க நம் அன்னை இருந்தாள். ஆனால் இந்த படுக்கை சீசன் 2 வில் சம்பளத்துக்கு வேலை செய்யும் நர்சுகள் தான் அனேகமாக இருப்பார்கள்.

அவர்களை நன்றி பாராட்டுவதுடன், அவர்கள் தங்கள் பணியினை செய்து முடிக்க உங்கள் ஒத்துழைப்பை நல்குங்கள்.

கடைசி காலங்களில் உங்களது முதுமையைப் பயன் படுத்தி உங்கள் பணம் மற்றும் உடமைகளை உங்களிடம் இருந்து பறிக்க சிலர் முயற்சிக்கலாம். அது போன்ற மனிதர்களிடம் உஷாராக இருக்கவும்.

உங்களுக்கு இனி தேவை இல்லாதவற்றை நீங்களாகவே மற்றவர்களுக்குக் கொடுத்து விடுங்கள்.

மிக முக்கியமாக, பற்றற்று வாழப் பழகுங்கள். வாழ்வின் கடைசி காலங்களில் கொஞ்சம் கொஞ்சமாக ஒளி குறைந்து இருள் சூழும் நேரம் நெருங்கும். அச்சமயத்தில் ஒவ்வொரு நாளையும் கடத்துவது ஒரு யுகமாகத் தோன்றும்.

ஆகவே 60ஐத் தாண்டியவர்கள் வாழ்க்கை என்றால் என்ன என்று இந்நேரம் உங்களுக்கு நன்றாகவே தெரிந்திருக்கும்.

உங்களுக்குக் கிடைத்த வாழ்வை மகிழ்வோடு ஏற்று அனுபவியுங்கள். நம் பிள்ளைகள் என்னாவார்களோ, நம் பேரன் பேத்திகள் எவ்வளவு மார்க் வாங்குவார்களோ என்றெல்லாம் இனிக் கவலைப் படாதீர்கள். ஊரில் ஊழல் மலிந்து விட்டதே, அரசியல்வாதிகள் அநியாயம் பண்றாங்களே என்றெல்லாம் நினைத்து மனதை வருத்திக் கொள்ளாதீர்கள்.

இனி நீங்கள் வாழப் போகும் எஞ்சிய காலத்தை மகிழ்வோடு வாழுங்கள். மற்றவர்களை மதியுங்கள்.

பணிவோடு நடந்து கொள்ளுங்கள். உங்கள் வயதைக் காரணம் காட்டி உங்களை உயர்த்திக் கொள்ள எண்ணாதீர்கள். யார் மனமும் புண்படும் விதமாக நடக்காதீர்கள்.

வாழ்க்கையை அதன் போக்கில் வாழ்ந்து சஞ்சலமற்ற மனநிலையையும் அமைதியையும் தேடுங்கள். ■

# Real Peace Only in Our Mind



Murugan, the proprietor of a coffee shop had been busy all day. Being Saturday, his shop was very crowded and the customers seemed unending.

He had been on his toes since morning. Towards the evening he felt a splitting headache surfacing.

As the clock ticked away, his headache worsened.

Unable to bear it, he stepped out of the shop leaving his staff to look after the sales.

He walked across the street to the Pharmacy to buy himself a painkiller to relieve his headache.

He swallowed the pill and felt relieved. He knew that in a few minutes he would feel better.

As he strolled out of the shop, he casually asked the salesgirl, “Where is Mr. Gopalan, the Chemist? He’s not at the cash counter today!”

The girl replied, “Sir, Mr. Gopalan had a splitting headache and said he was going across to your coffee shop. He said a cup of hot coffee would relieve him of his headache.”

The man’s mouth went dry and he mumbled, “Oh! I see.”

This is a typical case of looking outside ourselves for something that we have within us.

How strange, but true!

The Chemist relieves his headache by drinking coffee and the coffee shop owner finds relief in a pain-relieving pill!

Similarly, many of us travel across the lengths and breadths of the universe and also visit several shrines and ashrams to find peace.

Eventually, we come to realize that real peace is within our own hearts.

PEACE is really a state of mind. ■

# கன்னிமாரா அதிசய மரம்!



**463** வயது, 130அடி உயரம் "கன்னிமாரா" தேக்கமரம் ஆனைமலை பல்லுயிர் பெருக்கத்தின் அமைவிடமாய் உள்ள மேற்குத்தொடர்ச்சி மலையின் ஆனைமலை புலிகள் காப்பகத்தின் வழியாக பரம்பிக்குளம் புலிகள் காப்பகத்திற்கு சென்றால், முழுவதும் தேக்குமரங்கள் நிரம்பிய மலைக்காடுகளை காணமுடியும்.

இந்த காடுகளில் தான் இந்தியாவின் மூத்த வயதுடைய மரங்களுள் ஒன்றான "கன்னிமார" தேக்கமரமும் உள்ளது. தூனக்கடவு, பெருவாரிப்பள்ளம், ஆழியாறு என்ற மூன்று அணைகளும் அமைந்துள்ள இந்த காட்டுப்பகுதியில், ஏராளமான புலிகளும், கரடிகளும் வசித்து வருகின்றது. கேரளா அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த பகுதிக்கு கேரளாவிலிருந்து வர முடியாது. தமிழகத்திலுள்ள பொள்ளாச்சி, ஆனைமலை, டாப்சிலிப் "Topslip" வழியாகத்தான் போக முடியும். கேரளா மாநில எல்லையிலுள்ள ஆனைப்பாடி என்ற இடத்திற்கு அந்தப் பக்கம் அங்கே குடியிருக்கும் மலைவாழ் மக்களைத்தவிர வேறு பொதுமக்கள் தனியாக செல்ல தடைசெய்யப்பட்டுள்ளது.

பரம்பிக்குளம் புலிகள் காப்பகத்தின் சார்பில் இயக்கப்படும் வேன்களில் சென்றால், தூனைக்கடவு அணையிலிருந்து வலதுபக்கம் எட்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது "கன்னிமாரா" தேக்கமரம். மலையாளத்தில் "கன்னிமாரா" என்பதை ஆங்கிலத்தில் virgin tree என்று கூறியுள்ளனர். Virgin என்பது இலத்தின் மொழியில், வான் மண்டலத்திலுள்ள ஆறாவது நட்சத்திர கூட்டத்தை குறிக்கும். கையில் நெற்கதிருடன் இருக்கும் பெண்ணின் படம் இதற்கு அடையாளமாகும். இதன்படி தமிழில் "இளமை மாறாத மரம்" என்று பொருள் கொள்ளலாம். 2011ம் ஆண்டு கணக்கின்படி இந்த மரத்திற்கு சுமார் 460 வயது இருக்கும் என கணக்கிட்டுள்ளனர். அப்போதைய உயரம் 39.98 மீட்டர். சுற்றளவு, 7.02 மீட்டர். அதற்கு பிறகும் மரம் குறைவான வேகத்தில் வளர்ந்து கொண்டுள்ளது. மேற்கு தொடர்ச்சி மலைகளில் கண்டுகொள்ளப்பட்ட மரங்களில் இதுதான் அதிக வயதுடைய மரம் என்று கூறும் வனத்துறையினர் இப்போது இந்த மரத்தின் உயரம்: 130அடிக்கு மேலிருக்கும் என்கின்றனர். மரத்தைச் சுற்றி நின்று ஐந்து பேர் கைகளையும் சேர்த்து பிடித்தால் தான் இந்த மரத்தை கட்டிப்பிடிக்க முடியும். மேற்கு தொடர்ச்சி மலையிலுள்ள இயற்கையின் அதிசயங்களில் இதுவும் ஒன்று. ■



S.SURIYA



# தந்தையை போற்றுங்கள்!

**அம்மா 9 மாதங்கள் வயிற்றில் சுமக்கிறார். அப்பாவோ 25 வருடங்கள் மனதில் வைத்து சுமக்கிறார். ஆனால், இருவருமே சமம்தான். இருந்தாலும் அப்பா ஏன் பின்தங்கியிருக்கிறார் என்று இன்னும் தெரியவில்லை.**

தாய் குடும்பத்திற்கு ஊதியம் இல்லாமல் வேலை செய்கிறார். அப்பா தனது சம்பளத்தை குடும்பத்திற்காகவே செலவிடுகிறார். அவர்களின் முயற்சிகள் இரண்டுமே சமம்தான். இருப்பினும் அப்பா ஏன் பின்தங்கியிருக்கிறார் என்று இன்னும் தெரியவில்லை. அம்மா நீங்கள் விரும்பியதை சமைக்கிறார். அப்பா நீங்கள் விரும்பியதை வாங்கித் தருகிறார். அவர்களின் பாசம் இரண்டுமே சமம்தான். ஆனால், அம்மாவின் பாசம் உயர்ந்ததாக காட்டப்படுகிறது. அப்பா ஏன் பின்தங்கியிருக்கிறார் என்று தெரியவில்லை.

நீங்கள் தொலைபேசியில் பேசும்போது, முதலில் அம்மாவுடன் பேச விரும்புகிறீர்கள். உங்களுக்குக் காயம் ஏற்பட்டால், நீங்கள் 'அம்மா' என்று அழுகிறீர்கள். உங்களுக்குத் தேவைப்படும்போது மட்டுமே நீங்கள் அப்பாவை நினைவில் கொள்கிறீர்கள். ஆனால், மற்ற நேரங்களில் நீங்கள் அவரை நினைவில்கூட வைத்திருப்பதில்லை என்று அப்பா எப்போதாவது நினைத்திருக்கிறாரா? குழந்தைகளிடமிருந்து அன்பைப் பெறும்போது, தலைமுறை தலைமுறைகளாக, அப்பா எப்போதும் பின் தங்கியே இருக்கிறார். ஏன் என்று தெரியவில்லை..

அலமாரியில் வண்ணமயமான புடவைகள் மற்றும் குழந்தைகளுக்கான பல ஆடைகள் கொண்டு நிரப்பப்பட்டிருக்கும். ஆனால், அப்பாவின் உடைகளோ மிகவும் குறைவுதான். அவர் தனது சொந்த தேவைகளைப் பற்றி எப்போதும் கவலைப்படுவதில்லை. அப்பா ஏன் பின்தங்கியிருக்கிறார் என்று இன்னும் தெரியவில்லை. அம்மாவிடம் பல தங்க ஆபரணங்கள் இருக்கும். ஆனால், அப்பாவுக்கென்று ஆபரணம் ஏதும் இருப்பதில்லை. தனக்கென்று ஏதும் வாங்கியதுமில்லை. இருந்தாலும் அப்பா ஏன் பின்தங்கியிருக்கிறார் என்று இன்னமும் தெரியவில்லை. குடும்பத்தை கவனித்துக் கொள்வதற்கு அப்பா அன்றாடம் மிகவும் கடினமாக உழைக்கிறார். ஆனால், அங்கீகாரத்தைப் பெறும்போது, அவர் எப்போதும் பின்தங்கியே இருக்கிறார். அது ஏன் என்று புரியவில்லை.

அம்மா கூறுகிறார், 'நாம் இந்த மாதம் குழந்தைகளின் பள்ளி/ கல்லூரிக்கு கல்விக் கட்டணம் செலுத்த வேண்டும். எனவே, வரும் விசேஷத்துக்கு எனக்காக சேலை எதுவும் வாங்க வேண்டாம்' என்கிறாள். நான் முன்பே முடிவெடுத்து விட்டேன். எனக்கும் வேண்டாம் என்கிறார். குழந்தைகளுக்குப் தங்களுக்குப் பிடித்த உணவை வீட்டிலும், வெளியிலும் வாங்கித் தருகிறார். அப்பாவுக்கு என்று எதையும் வைப்பது இல்லை. அப்பா அன்று உணவுடன் ஊறுகாயைப் பொரியலாக எண்ணி சாப்பிடுகிறார். பிள்ளைகள் மீது அவர்களின் பாசம் இரண்டுமே சமம்தான். ஆனால், அப்பா ஏன் பின் தங்கியிருக்கிறார் என்று இன்னும் தெரியவில்லை.

பெற்றோர்களுக்கு வயதாகும் போது, குழந்தைகள் சொல்கிறார்கள், வீட்டு வேலைகளை கவனித்துக் கொள்வதில் அம்மா தங்கள் உடன் இருப்பது பயனுள்ளதாக இருக்கும் என்று. ஆனால், அப்பாவோ பயனற்றவர் என்று குழந்தைகள் நினைக்கிறார்கள்.

அப்பா ஏன் பின்தங்கியே இருக்கிறார்?

அவர்தான் குடும்பத்தின் முதுகெலும்பாக இருக்கிறார். அவர் இருக்கும் காரணத்தால் தான் நம்மால் நிமிர்ந்து நிற்க முடிகிறது. இருந்தாலும் அப்பா ஏன் பின்தங்கியே இருக்கிறார் என்றுதான் தெரியவில்லை. ■



# மற்றவர் மதிக்க வாழ்வோம்!

* அடுத்தவர் பணத்தை முடிந்தவரை ரொட்டேட் பண்ணாதீர்.. (பண்ணவும் நினைக்காதீர்)

* முடிந்தவரை அடுத்தவரின் கார் மற்றும் டூ வீலர் கடன் கேக்காதீர்... அப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டால், கடன்வாங்கி சென்ற வாகனத்தில் முடிந்த வரை எரிபொருள் நிரப்பி கொடுங்கள்...

* பொதுவாக செலவு செய்யும் இடத்தில் முன்கூட்டியே சந்தேகம் இருந்தால் கேட்டு விடுங்கள்.. செலவு செய்தபின் tally சாப்ட்வேர் மாதிரி கேள்வி கேக்காதீர்கள்...

* பொது இடங்களில் நிற்கும் போது யாருடைய வழியையேனும் அடைத்துக் கொண்டு நிற்கிறீர்களா என்று உறுதி செய்து கொள்ளுங்கள்.... குறிப்பாக பொது இடம், சிக்னல்

* நண்பர்கள் / உறவினர்கள் வீடுகளுக்கு செல்லும்போது அவற்றின் அமைப்பைக் குறை சொல்லாதீர்கள். (பாத்ரூம் இங்கே இருந்திருக்கலாம்!) அமைப்பை மாற்ற யோசனை சொல்லாதீர்கள்... (இந்த பிரிட்ஜை இங்கே வெச்சுக்கலாமே! (none of your business!). அவர்கள் படுக்கையறைக்கு செல்லாதீர்கள்...

* அவர்கள் போனைக் கேட்காதீர்கள் ... அவர்கள் வைஃபை பாஸ்வேர்ட் கேட்காதீர்கள்...

* கடனைத் திருப்பிக் கேட்கும் முன்னர் அதற்கு ஒரு குறிப்பிட்ட குறைந்தபட்ச நாட்கள் காத்திருங்கள்...

* ஒருவர் கைபேசி அழைப்பை எடுக்கவில்லை என்றால் தொடர்ந்து விடாமல் மீண்டும் மீண்டும் அழைக்க வேண்டாம் ...அது கொஞ்சம் சைக்கோத் தனம். அவர்களையும் தேவையில்லாமல் பயமுறுத்தும்...

* டாக்சிதான் ஏறிவிட்டோமே என்று டாக்சியில் கத்திப் பேசாதீர்கள்... அது ஓட்டுனரை தொந்தரவு செய்யும். ஹெட்செட்டில் பாட்டு கேட்டுக்கொண்டே சத்தமாகப் பேசவோ, பாடவோ, டான்ஸ் ஆடவோ வேண்டாம்...

* நீங்கள் ஓட்டுனராகவோ, அல்லது சேவை வழங்குநராகவோ (எலக்ட்ரீசியன், பிளம்பர், பெயிண்டர் etc.,) இருந்தால் கஸ்டமரின் personal விஷயங்களை / தகவல்களைக்

கேட்காதீர்கள்... உங்கள் வேலையை மட்டும் பாருங்கள்...

* ஒருவர் உங்களுக்கு treat தரும் போது இதுதான் சாக்கு என்று விலையுயர்ந்த அயிட்டங்களை ஆர்டர் செய்யாதீர்கள்...

* நீங்கள் guest ஆக ஒரு உறவினர் வீட்டுக்கு சென்றால் உங்களுக்குத் தேவையான மாத்திரை மருந்துகளைக் கொண்டு செல்லுங்கள்... அங்கே போய் ராத்திரி 9 மணிக்கு 'ரகு , எனக்கு இந்த மாத்திரை வாங்கி வந்திடறியா' என்று கடுப்பேற்றாதீர்கள்...

* முதல் சந்திப்பிலேயே ஒருவரைப் பற்றிய opinion களைத் தவிருங்கள்... 'நீங்க ரொம்ப shy டைப்பா? ' வந்ததில் இருந்து பத்து வார்த்தை கூட பேசி இருக்க மாட்டீங்க...

* நீங்கள் சந்திக்கும் நபரைப்பற்றி அதிகம் கேளுங்கள் / பேசுங்கள். உங்களைப் பற்றி அல்ல. (நான் எப்படின்னா, நான் இப்படித்தான், எனக்கு இது பிடிக்காது, ஒருநாள் நான்... etc.,)

* வயது, சம்பளம், விவாகரத்து காரணம், இவைகளைக் கேட்காதீர்கள்... தம்பதிகளிடம் எப்போது குழந்தை என்று கேட்காதீர்கள்...

* உங்களை விட வயதில் சிறியவர்களிடம் உரையாடும்போது அட்வைஸ் செய்யாதீர்கள்... (no one likes advices.)

* வீட்டில் உறவினர்கள் வருகிறார்கள் என்றால் அவர்களுக்கு அன்றாடம் தேவையானவற்றை வாங்கி வையுங்கள்... அவர்களை பாத்ரூம் சென்று என்றோ தீர்ந்து போன பேஸ்டை பிதுக்க வைக்காதீர்கள்.

* புதுமனைப் புகுவிழாவின் போது வீடு வாங்கியவரை முந்திரிக் கொட்டை போல 'ஸ்கொயர் பீட் எத்தனை ?' என்று கேட்காதீர்கள்... எங்க ஏரியாவில் கம்மி ரேட்' என்றெல்லாம் சொல்லாதீர்கள்... 'வீடு நல்லா இருக்கு, கங்கிராட்ஸ்' என்று முதலில் சொல்லுங்கள்...

* ஒருவர் உங்களிடம் அன்பளிப்பை கிஃப்ட் ரேப் செய்து கொடுத்தால் 'பிரிக்கலாமா?' என்று கேட்டுவிட்டுப் பிரியுங்கள். 'ஓ, சாண்டிவிட்ச் மேக்கரா, ஏற்கனவே என் கிட்ட இருக்கே' என்றெல்லாம் சொல்லாதீர்கள். accept it .

* பழைய நண்பர்கள் சந்திப்பில் உங்களைப் பற்றி/உங்கள் குழந்தைகள் பற்றி உயர்வாகவோ தாழ்வாகவோ பேசிக் கொள்ளாதீர்கள்... உங்கள் designationஐ கேட்டால் மட்டும் குறிப்பிடுங்கள்...

* ஒருவரை 3 வினாடிகளுக்கு மேல் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருப்பது offensive. (அந்த ஒருவர் உங்கள் காதலியாகவோ காதலனாகவோ இல்லாத பட்சத்தில்!). அதேபோல் ஒருவர் சமையல் செய்யும் போதோ, கோலம் போடும் போதோ, வரையும் போதோ பின்னால் நின்று கொண்டு உற்றுப் பார்த்துக்கொண்டே இருக்காதீர்கள்...

* பாடல்களை எப்போதும் இயர் போனிலேயே கேளுங்கள். சைனா செட்டை இயக்கி மற்றவர்களை கதிகலங்க வைக்காதீர்கள்...

* ஒருவரின் உடல் அமைப்பைப் பற்றி comment செய்யாதீர்கள்... (என்ன சார்? தொப்பை பெருசாயிருச்சு போல)

* டாய்லெட் யூரினலில் ஏற்கனவே ஒருவர் இருந்தால் அவர் பக்கத்தில் இருக்கும் யூரினலைத் தவிருங்கள்...

* மற்றவரின் taste /preference களைக் குறை சொல்லாதீர்கள்... (இந்த புக்கெல்லாம் எப்படித்தான் படிக்கிறீர்களோ / இந்தப் பாட்டெல்லாம் எப்படி கேட்கறீங்களோ!)

* ஒருவர் போட்டோ பார்க்க போனை உங்களிடம் நீட்டினால், அந்த போட்டோவை மட்டும் பாருங்கள்.

* குழந்தை இன்னும் இல்லை என்றால் அத்துடன் விட்டு விடுங்கள்... ஏன் என்று என்று கேட்டு அவர்கள் மனதை காயப்படுத்தாதீர்கள்.

* நமது வீட்டில் அல்லது கடையில் அல்லது நிறுவனத்தில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு மதிப்பளியுங்கள்.

* நமக்கு கீழ் உள்ள ஊழியர்களை மேன்மேலும் அதிக வேலைப்பளு கொடுக்காதீர்கள். அப்படி வேலைகள் அதிகரிக்கும் போது அதற்கான ஊதியத்தை மனம் நிறைவாக வழங்குங்கள்.

குறை, நிறை அனைவரிடமும் உண்டு. நம்மிடம் இருக்கும் தவறுகளை சரி செய்ய முயற்சி செய்வோம்... உறவுகளோடு நல்லுறவு காண்போம்! ■

**அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, சின்ன அண்ணன், பெரிய அண்ணன், சின்ன அக்கா, பெரிய அக்கா, சித்தப்பா, பெரியப்பா, அத்தை, மாமா, மச்சான், மச்சினி, அண்ணி, கொழுந்தனார், நாத்தனார், தாய்மாமன், சித்தப்பா பையன், சித்தப்பா பொண்ணு, பெரியப்பா பையன், பெரியப்பா பொண்ணு, அத்தை பையன், அத்தை பொண்ணு, மாமன் பொண்ணு, மாமன் பையன் ..இந்த உறவுகள் இனி இருக்குமா?**

காரணம், ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு என்று ஒரே ஒரு குழந்தை மட்டும் போதும் என்று முடிவெடுக்க ஆரம்பித்ததுதான். அப்படி இருக்கும் போது இந்த உறவுகள் எல்லாம் எப்படி வரும்.

பெண்கள் வயதுக்கு வந்ததும் சீர்வரிசை செய்யவோ பந்தல் போடவோ முதல் புடவை எடுத்துத்தரவோ எந்த தாய் மாமனும் இருக்கப்போவது இல்லை.

திருமணத்தின் போது அரசாணைக்கால் நட எந்த அண்ணனும் இருக்கப்போவதில்லை. மாப்பிள்ளைக்கு மோதிரம் போட எந்த தம்பியும் இருக்கப்போவதில்லை.

குழந்தைக்கு மோட்டை போட யார் மடியில் உட்கார வைப்பார்கள். கட்டிக்கொடுத்த பெண்ணுக்கு எதாவது பிரச்சனை என்றால் அண்ணனும் தம்பியும் பறந்து செல்வார்கள்.

இனியார்போவார்ஒவ்வொருபெண்ணும்,சொந்த பந்தம் ஏதுமின்றி ஆறுதலுக்கு ஆள் இன்றி தவிக்க போகிறார்கள்.

ஒவ்வொரு ஆணும் தன் கஷ்ட



# இந்த உறவுகள் இனி இருக்குமா?

நஷ்டங்களில் பங்குகொள்ள அண்ணன் தம்பி யாருமின்றி அவதிப்பட போகிறார்கள்.

அப்பா அம்மாவை தவிர எந்த உறவுகளும் இருக்கப் போவதில்லை. அந்த ஒரு குழந்தையும் வெளியூருக்கோ இல்லை.

தனிக்குடித்தனமோ சென்றுவிட்டால் ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்று வளர்த்தவர்கள். எல்லாம் வயதான காலத்தில், ஏனென்று கேட்க நாதியற்று முதியோர் இல்லத்திலோ இல்லை. அந்த ஒரு குழந்தைக்காக கட்டிய வசதியான வீட்டிலோ அனாதையாக கிடந்து சாவார்கள்.

உறவுகளின் உன்னத மதிப்பை உணராமல் பொருளாதார முன்னேற்றத்தை மட்டுமே குறிக்கோளாக கொண்டு ஒரு குழந்தைக்கு மேல் வேண்டாம் என சோம்பேறித்தனப்பட்டு எந்திர வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருக்கும் அத்தனை பேருக்கும் இதே நிலைதான்.

உடல்நிலை சரியில்லாமல் ஆஸ்பிடலில் சேர்க்கப்பட்டால் ஓடோடி வந்து பார்க்க உறவுகள் வேண்டாமா?

சின்ன சின்ன விஷயங்களுக்கெல்லாம் எனக்கு உனக்கு என்று சண்டைபோடும் அதே குழந்தைகள் தான், வயதான காலத்தில் அப்பா அம்மாவுக்கு எதாவது ஒன்று என்றால் நான் நீ என்று ஓடிவருவார்கள்.

கணவன் குடும்பம் குழந்தை என்று உயிரை விட்ட பெண்கள் கூட பெற்றோருக்கு ஒன்று என்றால் அத்தனையும் தூக்கியெறிந்துவிட்டு முதலில் வந்து நிற்பார்கள்.

ஒரே ஒரு முறை உங்கள் கடைசி காலத்தை நினைத்துபாருங்கள்! பணமில்லாத ஒருவனை அனாதை என்று யாரும் சொல்வதில்லை.

ஆனால் உறவுகள் இல்லாத ஒருவன் எத்தனை கோடி வைத்திருந்தாலும் அனாதைதான் என்பதை மறந்துவிடக்கூடாது.

கார் பங்களா வசதி வாய்ப்புகளுடன் ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்ற பெயரில் உறவுகளற்ற ஒரு அனாதையை வளர்ப்பதற்கும் வயதான காலத்தில் நாதியற்று சாவதற்குமா இவ்வளவு பாடுபட்டு ஓடி ஓடி சம்பாதிக்கிறீர்கள்.

பல குழந்தைகள் கூட்டுக்குடும்பம் கலாச்சாரம் மீண்டும் துளிர்க்க வேண்டும் வருங்காலம் உறவுகளை நமக்கு மீட்டுத்தருமா? ■





# கடற்படை போர்க்கப்பல்களில் பெண் அதிகாரிகள்!

**இந்திய கடற்படையில் சப் லெப்டினன்ட் குமுதினி தியாகி மற்றும் சப் லெப்டினன்ட் ரிதி சிங் ஆகியோர் கப்பலின் பணியாளர்களின் ஒரு பகுதியாக கடற்படை போர்க்கப்பல்களில் ஈடுபடுத்தப்படும் முதல் பெண் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டு உள்ளனர்.**

நியமிக்கபட்ட இரண்டு பெண் அதிகாரிகளும் கடற்படையின் புதிய எம்.எச் 60 ஆர் ஹெலிகாப்டர்களில் பறப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எம்.எச் 60 ஆர் எதிரி கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களைக்கண்டறியவடிவமைக்கப்பட்டுள்ளது, அவை ஏவுகணைகள் மற்றும் டார்பிடோக்களைப் பயன்படுத்தி ஈடுபடலாம். 2018 ஆம் ஆண்டில், அப்போதைய பாதுகாப்பு மந்திரி நிர்மலா சீதாராமன் 2.6 பில்லியன் டாலர் என மதிப்பிடப்பட்ட ஒரு ஒப்பந்தத்தில் லாக்ஹீட்மார்ட்டின் கட்டப்பட்ட ஹெலிகாபடர்களை வாங்கினார்.

இந்திய விமானப்படை (ஐ.ஏ.எஃப்) ஒரு பெண் போர் விமானியை தனது ரஃபேல் போர் விமானத்தில் நியமித்தது. தற்போது இந்திய கடற்படை பெண் அதிகாரிகளை நியமித்து உள்ளது.

இந்த இரண்டு அதிகாரிகளும் இந்திய கடலோர காவல்படையின் மூன்று அதிகாரிகள் அடங்கிய குழுவில் ஒரு பகுதியாக உள்ளனர்.

2016 ஆம் ஆண்டில், லெப்டினன்ட் பவனா காந்த், விமான லெப்டினன்ட் அவனி சதுர்வேதி, மற்றும் விமான லெப்டினன்ட் மோகனா சிங் ஆகியோர் இந்தியாவின் முதல் மகளிர் போர் விமானிகளானார்கள். இந்த நேரத்தில், 10 போர் விமானிகள் உட்பட 1,875 பெண்கள் சேவையில் உள்ளனர். பதினெட்டு பெண் அதிகாரிகள் நேவிகேட்டர்களாக உள்ளனர். ■



# காலத்துக்கும் பொருந்தும் கண்ணதாசன் பாடல்கள்!

திரைப்பாடல்கள் நம் நிஜவாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களோடு தொடர்புடையது போலவே அமைவது கண்ணதாசனின் பாடல்களின் சிறப்பு. அந்தப் பாடல்களை எந்தக் காலத்திலும் பொருத்திப் பார்த்தாலும் அந்தக் காலத்துக்காகவே எழுதப்பட்டது போல இருக்கும். வாழ்க்கையில் பொருளாதாரத்தினால் வரும் ஏற்றத்தாழ்வுகளை நாம் எப்படி கையாள வேண்டும் என்பதை விளக்கும் பாடல்தான் அவன்தான் மனிதன் படத்தில் வரும் இந்தப் பாடல்..

ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே கண்ணா
ஆசையெனும் தொட்டினிலே ஆடாதாரே கண்ணா
நீ நடத்தும் நாடகத்தில் நானும் உண்டு
என் நிழலில் கூட அனுபவத்தில் சோகம் உண்டு
பகைவர்களை நானும் வெல்வேன் அறிவினாலே
ஆனால் நண்பனிடம் தோற்று விட்டேன் பாசத்தாலே
நண்பனிடம் தோற்று விட்டேன் பாசத்தாலே
(ஆட்டுவித்தால்...)

பாஞ்சாலி உன்னிடத்தில் சேலை கேட்டாள்
அந்த பார்த்தனவன் உன்னிடத்தில் கீதை கேட்டான்
நானிருக்கும் நிலையில் உன்னை என்ன கேட்பேன்
இன்னும் நன்மை செய்து துன்பம் வாங்கும்
உள்ளம் கேட்பேன்
நன்மை செய்து துன்பம் வாங்கும் உள்ளம் கேட்பேன்
(ஆட்டுவித்தால்...)

கடலளவு கிடைத்தாலும் மயங்க மாட்டேன்
அது கையளவே ஆனாலும் கலங்க மாட்டேன்
உள்ளத்திலே உள்ளது தான் உலகம் கண்ணா
இதை உணர்ந்து கொண்டால் துன்பமெல்லாம்
விலகும் கண்ணா
உணர்ந்து கொண்டால் துன்பமெல்லாம்
விலகும் கண்ணா
(ஆட்டுவித்தால்...)



# எஸ்.பி.பியும் எம்.ஜி.ஆரும்!

உழைப்பு உயர்வைக் கொடுக்கும். நல்ல நேரம் இருந்தால் உழைப்புக்கேற்ற பலனாக பெயரும் புகழும் பணமும் கிடைக்கும்.

உண்மையான திறமையிருந்தால்தான் உயர்ந்த நிலையைத் தக்க வைத்துக்கொள்ள முடியும். இது எல்லாமே பாலுவின் வாழ்க்கையில் நடந்திருக்கிறது.

திரை உலகில் இசைத்துறையில் தனக்கென தனி இடத்தைப் பிடித்த எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் மறைவு பெரிய சோகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஏறத்தாழ 40ஆயிரம் பாடல்களை எஸ்.பி.பி பாடியிருந்தாலும் எம்.ஜி.ஆருக்காக அவர் பாடிய முதல் பாடல் அடிமைப் பெண் படத்திற்காக "ஆயிரம் நிலவே வா" பாடல் குறிப்பிடத்தக்கது.

தமிழில் பாட வருவதற்குள் சில தெலுங்கு படங்களுக்காகப் பாடியிருக்கிறார். தமிழில் முதலில் பாடிய பாடல் 'இயற்கையென்னும் இளைய கன்னி' என்ற டூயட்.

இது 'சாந்தி நிலையம்' படத்திற்காக மெல்லிசை மன்னர் எம். எஸ். விஸ்வநாதன் இசையமைப்பில் பாடியது. ஆனால் பாலுவை தமிழ்ப் பட உலக ரசிகர்களிடையே பிரபலமாக்கிய பாட்டு ஒன்று உண்டு.

அந்தப் பாடல் அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரை எல்லாரையும் கவர்ந்த பாடல். ஒரே பாடலால் தமிழகம் முழுவதும் தெரிந்த பின்னணி பாடகர் எஸ். பி. பி. ஒருவராகத்தான் இருக்க முடியும். அவருக்கு புகழை வாங்கித் தந்த பாடல் 'ஆயிரம் நிலவே வா' என்று 'அடிமைப் பெண்'ணில் ஒலித்த பாடல்தான்.

'ஆயிரம் நிலவே வா' பாடலை எஸ்.பி.பி பாடக் காரணமாயிருந்தவர் மக்கள் திலகம் தான். பாலு அந்தப் பாடலைப் பாட வேண்டிய நாளில், நல்ல காய்ச்சலில் படுத்திருந்தார் என்பதை முன்பே சொல்லியிருந்தார்.

பாலு இல்லாமல் கார் திரும்பி வந்ததும், விஷயத்தைப் புரிந்துகொண்ட மக்கள் திலகம், ரிக்கார்டிங்கை ரத்து செய்துவிட்டார்.

இந்த விவரம் பாலுவிற்குத் தெரியாது. தனக்கு பதிலாக வேறு யாரோ ஒருவர் அந்தப் பாட்டைப் பாடியிருப்பார் என்று தான் நினைத்திருந்தார்.

இரண்டு மாதத்திற்குப் பிறகு, மீண்டும் எம். ஜி. ஆர். பிக்சர்ஸ் கார் பாலுவை அழைக்க வந்தபோது, பாலுவிற்கு அதை நம்பவே முடியவில்லை.

தன்னைப்போல பிரபலமாகாத ஒரு பாடகனுக்காக எம். ஜி. ஆர். பிக்சர்ஸ் போன்ற ஒரு பெரிய நிறுவனம் இரண்டு மாதங்கள் காத்திருப்பார்கள் என்பதை பாலுவால் நம்ப முடியவில்லை.

பாடலைப் பாடிய பிறகு மக்கள் திலகத்தைச் சந்தித்து நன்றி சொன்னார். அப்பொழுது மக்கள் திலகம் பாலுவிடம் 'தம்பி என் படத்திலே பாட்டுப் பாடப் போறீங்கன்னு நீங்க எல்லார்கிட்டேயும் சொல்லியிருப்பீங்க. உங்க நண்பர்கள் இந்தப் படத்தில் உங்க பாடலை ஆவலோடு எதிர்பார்த்திருப்பாங்க, உங்களுக்கு பதிலாக வேறு ஒருவரைப் பாடவைத்து உங்களையும், உங்கள் நண்பர்களையும் ஏமாற்ற நான் விரும்பல. அதனால்தான் உங்களுக்காக இந்தப் பாட்டு காத்திருந்தது' என்று கூறி வழியனுப்பினார்.



மிகப்பெரிய நடிகராக இருந்தாலும் வளர்ந்து வரும் கலைஞரின் மனம் வருந்தக்கூடாது என்பதில் எம்.ஜி.ஆருக்கு இருந்த மனிதநேயம் அவரின் வெற்றிக்கான காரணத்தை நமக்கு புரிய வைக்கிறது. ■

## ரசிகர்களுக்குப் புதிர்..!

நடிகை திரிஷா கிட்டத்தட்ட 15 வருடங்களுக்கும் மேல் தமிழ் சினிமாவில் முன்னணி நடிகையாக வலம் வந்து கொண்டிருக்கிறார். இன்னமும் இவரை அடித்துக் கொள்ள ஆளில்லை. ஒரு கட்டத்தில் கமர்ஷியல் நடிகையாக வலம் வந்த திரிஷா தற்போது கதையின் நாயகியாக தொடர்ந்து பல படங்களில் நடித்து வருகிறார். திரிஷா நடிப்பில் அடுத்தடுத்து கர்ஜனை, பரமபத விளையாட்டு, ராங்கி போன்ற படங்கள் வெளியீட்டுக்குத் தயாராக உள்ளன.


சமீபகாலமாக திரிஷாவின் நடவடிக்கைகள் அனைத்துமே ரசிகர்களுக்குப் புதிர் போடும் விதமாக அமைந்துள்ளது. தெலுங்கு நடிகர் ராணாவைக் காதலிப்பதாகத் தகவல் வெளியானது. ராணா சமீபத்தில் திருமணம் செய்து கொண்டதை அடுத்து திடீரென சமூக வலைத்தளங்களில் இருந்து ஒரு மாதம் ஓய்வு எடுக்கப் போவதாக அறிவித்தார்.

ஆனால், இருவருக்குள்ளும் நட்பு மட்டும்தான் இருக்கிறது எனத் தற்போது வரை கூறி வருகிறார் திரிஷா. இந்நிலையில் தன்னுடைய சிறுவயது நினைவுகளை ரசிகர்களுடன் பகிர்ந்து வருகிறார் திரிஷா. அந்த வகையில் தன்னுடைய சிறுவயது புகைப்படம் ஒன்றை வெளியிட்டு, தேவதை முகம், பேய்க் கனவுகள் என்பதைப்போல வாசகம் பதிவிட்டு புகைப்படத்தை வெளி யிட்டுள்ளார். இந்தப் புகைப்படம் தற்போது இணையதளங்களில் காட்டுத்தீ போல் வைரலாகி வருகிறது.



## இது ரம்யா சீசன்!

ஜோக்கர், ஆண்தேவதை போன்ற படங்களில் ஹீரோயினாக நடித்தவர் ரம்யா பாண்டியன். அந்த படங்களில் நடித்தபோது இல்லாத வரவேற்பு தற்போது ரம்யா பாண்டியனுக்கு கிடைத்துள்ளது. அதற்கு காரணம் விஜய் டிவி அவரை குத்தகைக்கு எடுத்துள்ளது தான். குக் வித் கோமாளி தொடர்ந்து தற்போது வரை ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ரம்யா பாண்டியனுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர். இந்நிலையில் திடீரென ரம்யா பாண்டியன் தனிமைப் படுத்தப்பட்டுள்ள செய்தி கேட்டு ரசிகர்கள் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளனர். அதற்கு காரணம் தெரியாமல் ரசிகர்கள் பயங்கர குழப்பத்தில் இருக்கின்றனர். சில வாரங்களுக்கு முன்பு வரை விஜய் டிவி நிகழ்ச்சியில் கலந்து கொண்டவருக்கு திடீரென என்ன ஆனது என புலம்பிக் கொண்டிருக்கின்றனர். அது ஒன்றும் இல்லை. தன்னுடைய மொத்த வித்தையும் காட்டுவதற்காக விஜய் டிவியில் விரைவில் தொடங்க இருக்கும் பிக் பாஸ் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள இருக்கிறாராம். அதற்காகத்தான் தற்போது ரம்யா பாண்டியன் தனிமைப்படுத்தப் பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளது. அனேகமாக இந்த சீசனில் ரம்யா பாண்டியன் வெற்றி பெற அதிக வாய்ப்பு இருக்கிறது என்கிறது கோலிவுட் வட்டாரம்.





# மித்ரா டாக்கீஸ்

## 'எமோஷனல்' ஆன மிஷ்கின்!

தமிழ் சினிமாவில் முன்னணி இயக்குநராக வலம் வருபவர் மிஷ்கின். தனது வித்தியாசமான கதைகள் மற்றும் மேக்கிங்கால் இவர் பிரபலமடைந்தார். இவர் இயக்கிய அஞ்சாதே, ஓநாயும் ஆட்டுக்குட்டியும், பிசாசு உள்ளிட்ட திரைப்படங்கள் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. அண்மையில் இவர் உதயநிதி, அதிதி ராவ், நித்யா மேனன் நடிப்பில் சைக்கோ திரைப்படத்தை இயக்கினார். இவர் தற்போது ஆண்ட்ரியா நடிப்பில் பிசாசு2 திரைப்படத்தை இயக்கவுள்ளார்.

இந்நிலையில் இயக்குநர் மிஷ்கின் தனது ட்விட்டர் பக்கத்தில் ஒரு எமோஷனல் பதிவை வெளியிட்டுள்ளார். இதுகுறித்த தனது பதிவில், "நான் ஒரு மனிதருக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அது நான் மிகவும் நேசிக்கின்ற மகா கலைஞனான என் பாலா. 'பிசாசு 2' இயக்கப்போகிறேன் என்று சொன்னவுடன் உடனடியாக அவருக்கு சொந்தமான டைட்டிலை எனக்கு வழங்கிய பாலாவின் நெற்றியில் என் அன்பான முத்தங்களை பதிக்கிறேன்" என அவர் பதிவிட்டுள்ளார்.

# தொழில் முனைவோருக்கு வழி காட்டும் இளைஞர் லோகேஷ்..!



**இன்றைய இளம் தொழில் முனைவோர்களுக்கு உந்து சக்தியாக விளங்குகிறார். பிஜி எனர்சியா நிறுவனத்தின் நிறுவனரும் பி.லாவன் லோகேஷ். சிறு தொழில் முதல் கோடிக்கணக்கில் வரவு செலவு செய்யும் பெரிய நிறுவனங்கள் வரை அனைத்து தரப்பினருக்கும் தேவையான தகவல்களை தனது பாக்கெட்டில் வைத்திருக்கிறார்.**

அவர்களது வளர்ச்சி, முன்னேற்ற நடவடிக்கைகள் அனைத்துக்கும் தோள்கொடுத்து தொழிலை லாபகரமாகச் செய்ய கை தூக்கிவிடுகிறார். தொழில் செய்ய விரும்பி வரும் இளைஞர்களுக்கு இலவசமாகவே ஆலோசனைகளை வழங்கி வருகிறார். இப்படி எப்போதும் சுறுசுறுப்புடன் தேனீயைப்போல இயங்கிவரும் லாவன் லோகேஷ் திருவள்ளூரில் உள்ள அவரது பிஜி எனர்சியா நிறுவனத்தில் சந்தித்தோம். இதோ அவரது பேட்டியிலிருந்து...

கல்லூரியில் படிக்கும்போது தொழில்துறையில் சிறந்து விளங்கும் மிகபெரிய ஆளுமைகளைப் பற்றி தெரிந்து கொண்டேன். நாமும் இப்படி சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்குள் அப்போதே வந்துவிட்டது. அதனால் பலரது வாழ்க்கை வரலாறுகளை தேடிப்படிக்க ஆரம்பித்தேன்.

தொழில், வணிகத்திற்குத்தான் யாரையும் வசதி படைத்தவர்களாக்கும், பணக்காரர்களாக்கும் சக்தி உண்டு என்பதையும் அப்போதுதான் உணர்ந்து கொண்டேன். எந்த ஒரு தொழிலையும் முறையாக திட்டமிடலோடு செய்தால் அது யாரையும் கைவிடுவதில்லை என்பதையும் தெரிந்து கொண்டேன்.

இதுபோன்ற கருத்துகள் என்னுள் ஆழமாக வேரூன்ற ஆரம்பித்தது. நாமே ஒரு தொழிலைத் தொடங்கி நடத்துவதுடன், இதில் என்னைப் போல் ஆர்வமுள்ளவர்கள் முன்னேற ஒரு வழிகாட்டியாகவும் இருக்கலாமே என நினைத்துதான் இந்த பிஜி எனர்ஜியா நிறுவனத்தைத் தொடங்கினேன்.

மனிதவளமும், தொழில் வாய்ப்பும் மிகுந்த நம் நாட்டில் சுயதொழில் குறித்த விழிப்புணர்வு




இளைஞர்களிடம் போதிய அளவுக்கு இல்லை என்றே சொல்லலாம். அந்தவகையில் நாமும் பயிற்சிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தலாமே என நினைத்து படித்த இளைஞர்கள், மாணவர்கள் என அனைத்து தரப்பினருக்கும் தற்போது திறன் மேம்பாட்டுப்பயிற்சிகளை வழங்கி வருகிறேன்.

எங்களது நிறுவனம் முழுக்க, முழுக்க இணையம் சார்ந்த சேவைகளை வழங்குகிறது. அதாவது தொழில் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்காக இணையத்தை பயன்படுத்திகொள்வது. ஒரு தயாரிப்புப் பொருளை சந்தைப்படுத்துவதும் மற்றும் அதனை விளம்பரப்படுத்துவதுமாகும். ஈகாமர்ஸ் என்று இதனை ஆங்கிலத்தில் வகைப்படுத்துகின்றனர்.

ஆக இப்படித்தான் தொழில் முனைவோருக்காக நாங்கள் அனைத்து சேவைகளையும் இணையத்தைப் பயன்படுத்தி செய்து தருகிறோம். இதில் ஒரு பொருளை சந்தைப்படுத்துவது முதல் அதனை விற்பனை செய்து தருவது வரை வணிகத்தின் அனைத்து நிலைகளிலும் சேவையை வழங்குகிறோம். குறிப்பாக மார்கெட்டிங் மற்றும் அட்வர்டைசிங் (Marketing and advertisement) சேவையை தருகிறோம்.

ஒரு தயாரிப்பு நிறுவனம் எங்களது பொருட்களை சந்தைப்படுத்தித் தாருங்கள் என கேட்டுக் கொண்டால், அந்த நிறுவனத்தின் முழுத்தகவல்களையும் இணையத்தில் பதிவேற்றித் தருவதோடு, தயாரிப்புப் பொருட்களின் முழுவிவரத்தையும் வெளியிடுகிறோம்.

இதற்காக யூடியூப், முகநூல், இன்ஸ்டாகிராம் போன்றசமூகவலைத்தளங்களையும்பயன்படுத்திக் கொள்கிறோம். இதேபோல் பொருளை விற்பனை செய்து தரவேண்டும் என அவர்கள் கோரினால் அதற்கான சேவையையும் விளம்பரத்தின் மூலம் நிறைவு செய்து தருகிறோம்.

அதாவது ஒரு நிறுவனத்திற்காக வலைமனை அமைத்துத்தருவது முதல் இணையவழியில் வாடிக்கையாளர்களிடம் பொருட்களை விற்பனை செய்து தருவது வரை அனைத்து வேலைகளையும் நாங்கள் செய்து தருகிறோம்.

இதில் சேவைக் கட்டணமாக 7 முதல் 12 விழுக்காடு வரை பெற்றுக் கொள்கிறோம். இது ஒவ்வொருவரின் தேவை மற்றும் பயன்பாட்டின் அடிப்படையில் மாறுபடும். அதாவது வாடிக்கையாளர்கள் செய்யும் தொழில், சந்தைப்படுத்தும் ஏரியா மற்றும் கால அளவு ஆகியவற்றைப் பொறுத்து இந்தக் கட்டணம் மாறுபடும்.

நாங்கள் பெரிய நிறுவனங்களுக்கு மட்டுமே இப்படி கட்டணம் பெற்றுக் கொண்டு சேவை தருகிறோம். ஆனால் இன்றைய காலகட்டத்தில் தொழில் செய்ய வேண்டும் என ஆர்வத்துடன் வரும் நபர்களுக்கு படித்த இளைஞர்களுக்கு தொழில் ஆலோசனைகளை வழங்குகிறோம். இதற்கென கட்டணம் ஏதும் பெற்றுக்கொள்வதில்லை.

நம் நாட்டில் படித்து முடித்து வேலையில்லாமல் அவதிப்படும் இளைஞர்கள் அதிகம். இவர்கள் அரசு வேலை அல்லது தனியார் நிறுவனங்களில் வேலை என நினைத்து காலத்தையும் நேரத்தையும் வீணடிக்கின்றனர்.

இன்னும் சிலர் தொழில் செய்ய ஆர்வம் இருந்தும் அதற்கான மூலதனம் இல்லாமல், அந்தத் தொழிலுக்கான அறிவு இல்லாமல் இருப்பார்கள் இன்னும் சிலர் எப்படி எங்கிருந்து தொடங்குவது

என்பது தெரியாமல் தடுமாறுவார்கள்.

ஆனால் சுயமாகத் தொழில் செய்ய வேண்டும் என இப்படிப் பலரும் நினைத்துக் கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்டவர்களுக்குத் தான் எங்களது சேவை அதிகம் தேவைப்படுகிறது. தொழில் சூழலும், மனித வளமும் அதிகம் உடைய நமது நாட்டில் இளைஞர்கள் சுயதொழிலில் இறங்கினால் கைநிறைய சம்பாதிக்கலாம், சாதிக்கலாம்.

அந்த வகையில் வாழ்வாதாரம் தேடித் தவிக்கும் தொழில் ஆர்வம் மிக்க இளைஞர்கள் எங்களிடம் வந்தால் அவர்களுக்கு நாங்கள் இலவசமாகவே அனைத்தையும் கற்றுத்தருகிறோம்.




இதுதவிர சுயதொழிலில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்காக 3 நிலைகளில் பயிற்சிகளை வழங்குகிறோம். முதலில் தொழில் தொடங்குவதற்கான அடிப்படை கூறுகள், தொழிலில் உள்ள வாய்ப்புகள், தயாரிப்பு உத்திகள், போட்டிகளை எதிர்கொள்வது எப்படி என்பது தொடங்கி பொருளை நுகர்வோரிடம் கொண்டு சேர்ப்பது வரை அனைத்து விவரங்களைப் பற்றியும் பயிற்சி எடுக்கிறோம்.

இரண்டாவதாக தயாரித்த பொருளை எப்படி சந்தைப்படுத்துவது, இதில் பாரம்பரியமான சந்தைப்படுத்தும் உத்திகள் முதல் நவீன டிஜிட்டல் மார்கெட்டிங் வரை அனைத்தையும் கற்றுத் தருகிறோம் மூன்றாவது கட்டமாக நுகர்வோரிடம் பொருளை விற்பனை செய்வது குறித்து விரிவான பயிற்சிகளை அளிக்கிறோம்.

இதுதவிர இளைஞர்கள் மற்றும் மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்குகிறோம். இதில் மாணவர்கள் தங்கள் திறமைகளை எப்படி வளர்த்துகொள்வது? விரும்பும் துறைகளில் எப்படி தயார்படுத்திக் கொள்வது? பனிரெண்டாம் வகுப்பு முடித்ததும் உயர் கல்விக்கு என்ன படிக்கலாம்? இளைஞர்கள் தங்களது கனவுகள் மற்றும் இலக்கை அடைய எப்படி தங்களை தகுதிப்படுத்தி கொள்வது? உள்ளிட்ட நிறைய பயிற்சிகளை அளிக்கிறோம்.

இப்படி பலவிதமான தன்முனைப்புப் பயிற்சிகளை பள்ளி, கல்லூரிகளுக்குச் சென்று அங்கு படிக்கும் மாணவர்களுக்கு வகுப்புகள் எடுக்கிறோம். இப்படி எந்தக்கல்வி நிறுவனம் அழைத்தாலும் அங்கு சென்று பயிற்சிகளை இலவசமாக வழங்க தயாராய் இருக்கிறோம்.

தொழில் முனைவோராக இருப்பவர்கள், சுயதொழிலில் இறங்கி சாதிக்கத் துடிக்கும் இளைஞர்கள், எதிர்காலத்தை திட்டமிட்டுக் கொள்ள விரும்பும் மாணவர்கள் இவர்களுக்காகவே எனது நிறுவனம் இயங்கி வழங்கி வருகிறது.

இதில் நானே ஒரு தொழில் முனைவோராக இருந்து மற்ற தொழில் முனைவோர்களையும் முன்னேற ஊக்கப்படுத்தி அவர்களுக்கு வழிகாட்டிடுகிறேன், என்கிறார் லாவன் லோகேஷ்,

தொழில் முனைவோராக இருப்பவர்கள், சுயதொழிலில் இறங்கி சாதிக்கத் துடிக்கும் இளைஞர்கள், எதிர்காலத்தை திட்டமிட்டுக் கொள்ள விரும்பும் மாணவர்கள் இவர்களுக்காகவே எனது நிறுவனம் இயங்கி வழங்கி வருகிறது.

இளைஞர்களுக்கு வழிகாட்டவே நான் இருக்கிறேன் என்று கூறும் மெக்கானிக்கல் எஞ்சினியரின் பொறியியல் பட்டப்படிப்பு முடித்துள்ள இளம் தொழிலதிபரான இவரது சேவை மேன்மேலும் வளரட்டும். தமிழக இளைஞர்கள் இவரை பயன்படுத்திக் கொள்ளட்டும்.

செல்பேசி எண் 82206 99083

lokeshlaven@gmail.com ■




சென்னை தி.நகர் சாய் இன்டர்நேஷனல் ஓட்டல் நிறுவனர் திரு ச.பாஸ்கர் – திருமதி நிர்மலா தேவி இணையரின் அருந்தவமகள் சாய்லட்சுமிஶ்ரீயின் முதல் பிறந்தநாள் விழா சென்னை காசி சிட்டி பார்க் வளாகம் ஜோடியாக் ஹாலில் நடைபெற்றது.இந்நிகழச்சியில் மித்ரா டைம்ஸ் ஆசிரியர் எம்.எஸ்.மூர்த்தி பங்குகொண்டு குழந்தையை வாழ்த்தினார்.உடன் கவிஞர்,வழக்கறிஞர் திரு எம்.பி.நாதன்,தொழிலதிபர்கள் திரு.முரளிதரன்,பாண்டிச்சேரி திரு.தமிழ்,மார்க்கெட்டிங் குரூப் திரு.பிரகாஷ்,சாய்இன்டர்நேஷனல் மேலாளர் மஞ்சு ஆகியோர் உடன் வாழ்த்தினர்.



# எதிர்பார்ப்பை குறைத்துக் கொண்டால் திருமணம் எளிதில் முடியும்!

## திருமண வரன் அமைப்பாளர் கோவை சி.வி.ராமசாமி சொல்கிறார்!

**பணியிலிருந்து ஒய்வு பெறுபவர்களில் பெரும்பாலானோர் தங்களின் உடலுக்கு ஓய்வு கிடைப்பதை விரும்புவார்கள்.கோவையைச்சேர்ந்த திரு.சி.வி.ராமசாமி ஓய்வுக்குப் பின்னும் ஓய்வின்றி உழைக்கிறார். சி.வி.ஆர்.ன் மாங்கல்யம் தந்துனானே என்றவாட்ஸ் அப் குழுவின் மூலம் நூற்றுக்கணக்கான திருமணங்கள் நடைபெற உதவியிருக்கிறார்.**

இது பற்றி சொல்லும் போது, நான் கடந்த1980 ஆம் ஆண்டில் இருந்து புரசைவாக்கம் சேக்கிழார் கல்வி பண்பாட்டு கழகத்தில் ஆயுள் சந்தா உறுப்பினர் ஆகவும் நம் சேக்கிழார் குழுமத்தில் 2012ல் இருந்து மாநில

உயர் மட்ட குழு உறுப்பினராகவும் கோவை மாவட்டத் தலைவராகவும் இருந்து வருகிறேன்.

நான் கோவையில் எல்.எம்.டபிள்யூ. இன்ஜினியரிங் தொழிற்சாலையில் பணிபுரிந்து ஓய்வு பெற்று பிறகு எஸ்.பி.ஐ. லைஃப் இன்சூரன்ஸ் அட்வைஸராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு ஓய்வு கிடைக்கும் நேரத்தில் நம் சமூகத்திற்கு ஏதாவது நல்லது செய்ய வேண்டும் என்று தோன்றியது. சி.வி.ஆர். மாங்கல்யம் தந்துநானே குழு இலவச சேவை ஆரம்பித்து பல வருடங்களாக திருமண தொடர்பு செய்து கொடுத்து வருகிறேன். நல்லபடியாக திருமணமும் நடந்து வருகிறது என் மனதுக்கு ஆத்ம திருப்தி என்கிறார்.

பெரும்பாலான வரன்களின் ஜாதகத்தை ஓரளவுக்கு நானே பார்த்து பேசி தகவல் கொடுப்பேன். ஆனால் பெற்றோர்களின் எதிர்பார்ப்பில் ஏதோ ஒன்று அது அமையாம போயிடும்.

### ஜாதகத்தில் தடங்கல் வருமா?

சில விஷயங்கள் காலங்காலமாகவே



தடங்கல் ஏற்படுத்துகிறது.ஆயில்யம்,மூலம் நட்சத்திரத்துப்பிள்ளைகளுக்கு தள்ளிப்போகும்.

### ஆயில்யம் மாமியாருக்கு ஆகாது

சாதரணமாக ஒரு தாய் தனது கையால் சமைத்ததை தனது மகனின் திருமணகாலம்வரை போட்டுவருகிறாள். அதன்பின்னர் மனைவி சமையல்தான்.

ஆயில்யம் நான்கும்/ஆறும் அம்மி போல என்பர். ஆயில்ய நட்சத்திரத்தில் பிறந்த பெண்கள் சமையல் கலையில் வல்லவராக இருப்பர். அதனால்

ஆயில்யத்தில் பிறந்த மனைவி வந்தபின் கணவன் மனைவியின் சமையலில் மயஙகிவிடுவதால் தாய்க்கு தன்மகன் மனைவியின் (ச)மையலில் சிக்கி கொள்வானோ என்ற உளவியல் குழப்பம் ஏற்பட்டுவிடும்.

இதற்கு காரணமான மருமகள் மீது ஒருவகையான வெறுப்பு பகையுணர்வு ஏற்படும். இதனால் சொல்லப்பட்டதே ஆயில்யம் மாமியாருக்கு ஆகாது என்பது. ஆக ஆயில்யத்தால் மாமியாருக்கு எந்தவித உயிர்க்கேடும் ஏற்படாது. இங்கு தேவை மாமியாரின் மனமாற்றமே.

IT Software துறையில் பணிபுரியும் மாப்பிள்ளைகளே நல்ல சாப்பாடு சாப்பிட ஆயில்ய நட்சத்திர பெண்களை திருமணம் செய்து கொள்ளுங்கள்.வாழ்த்துக்கள்.

மேலும் ஆயில்யம் புதனின் நட்சத்திரம் என்பதால் புத்திசாலித்தனமும் கணக்கு போடுவதில் கெட்டிக்காரத்தனமும் உள்ளவர்களாக இருப்பர்.

இந்த இரண்டு குணங்களும் மருமகளிடம் இருப்பது மாமியாருக்கு ஆகாதுதானே!

ஆயில்யத்தின் அதிதேவதை ஆதிசேஷன். இது மறைமுகமாக சொல்வது கணவனை அன்பாலும் உறவிலும் அதிகமாக அணைத்துக் கொள்வதை குறிப்பிடுகிறது

இந்த அன்பு அரவணைப்பில் சிக்கிய மகன் தன்னை மதிப்பானோ என்ற குழப்பம் தாயாகிய மாமியருக்கு ஏற்பட்டு அதனாலும் மாமியாருக்கு ஆயில்யம் ஆகாமல் போய்விடும்.

இப்போது கூட்டுக்குடும்பம் குறைவாகவே உள்ளது. மாமியார் மருமகள் பிரச்சனை அதிகம் வராது. புத்தியுள்ள ஆண்கள் புத்திசாலித்தனமான ஆயில்ய பெண்களை மணந்து வாழ்வில் வளம் பெறுவார்களாக.

### மூலம் மாமனாருக்கு ஆகாது

மூலநட்சத்திர பெண்ணை திருமணம் செய்துகொள்பவரின் அந்தஸ்து உயரும். அந்தகால சமூக அமைப்பில் கூட்டுக்குடும்பத்தில் தந்தையே அனைத்து அதிகாரமும் பெற்றவர். மருமகள் வந்தபின் மகனின் அந்தஸ்து உயரும்போது அது தந்தையேயாயினும் அவருக்கு சற்று தாழ்வு மனப்பான்மைஏற்படும். அதன் விளைவாக மகனின் உயர்வுக்கு காரணமான மருமகள்மீது பகை உணர்வு ஏற்படும் இதுவே மூலம் மாமனாருக்கு ஆகாது என்பதன் அடிப்படை.




❖ கோவை.பி.முத்துராஜ்

மூலநட்சத்திர மருமகளால் மாமனாருக்கு உயிர்க்கேடு வரும் என்பதில் உண்மையில்லை. காலப்புருஷ ராசிக்கு 9வது ராசியில் மூல நட்சத்திரம் உள்ளது. இதன் அதிபதி குரு என்பதால் இதில் பிறந்த பெண்கள் தங்கள் வாழ்க்கையில் நேர்மை ஒழுங்கு ஒழுக்கத்தை உயர்வாக கருதி கடைப்பிடிப்பர்.

காலப்புருஷ நட்சத்திரங்களில் 19வது நட்சத்திரமாக ஆதான நட்சத்திரமாக எல்லாவற்றுக்கும் ஆதார நட்சததிரமாக விளங்குகிறது.இதன் குறியீடாக கட்டப்பட்ட வேர் ஆணிவேர் சொல்லப்பட்டுள்ளது. ஆதலால் மூல நட்சத்திரபெண்கள் குடும்பத்தின் ஆணிவேராக இருப்பர்.கணவனின் அனைத்துமுயற்சிகளுக்கும் துணைநின்று உதவிகரமாக இராமனுக்கு துணைநின்ற அனுமனைப்போல் காத்து நிற்பர். அனுமன் மூலநட்சத்திரத்தில் பிறந்தவர் அன்றோ.

மூல நட்சத்திரத்தின் அதிபதி கேது. சோதிடத்தில் இராகு Ultra Violet-புற ஊதாக் கதிர்களின் தன்மையிலும். கேது Infra Red-அகச்சிவப்புக் கதிர்களின் தன்மையிலும் செயல்படுவதாக சொல்லப்படுகிறது. இந்தவகையில் மூலநட்சத்திர பெண்கள் சுயம்புசுயசிந்தனையாளர்கள் எனலாம். தாங்கள் எடுத்த காரியத்தை தீவிரமாக நிறைவேற்ற முயற்சி செய்பவர்கள். அதேபோல் எதையும் அதே தீவிரத்துடன் உதறித் தள்ளுபவர்கள்.

இந்தக் குணத்தை குறையாகவும் கொள்ளலாம். நிறையாகவும் கொள்ளலாம்.ஆயினும் முயற்சிகள் நிறைவேற தீவிரம் தேவைதானே. வாழ்வில் உயரவிரும்பும் அந்தஸ்து அடையவிரும்பும் ஆண்கள் மூலநட்சத்திர பெண்களை மணந்து உயர்வடைய வாழ்த்துக்கள்...!

### இந்த சேவைக்கு மற்றவரின் ஒத்துழைப்பு..

இந்த சேவைக்கு எனக்கு ஊக்கமளிப்பவர்கள் சேக்கிழார் கல்வி பண்பாட்டுக் கழகத் தலைவர் திரு.ச.பாஸ்கர், பொதுச் செயலாளர் புலவர் கணபதி, பொருளாளர் ஏ.கே.சிவராஜ் ஆகியோர் மற்றும் என் குடும்பத்தார் ஒத்துழைப்பு எனக்கு உந்துதலாக இருக்கிறது..

உங்கள் சேவை தொடர மித்ரா டைம்ஸ் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

"ரொம்ப நன்றிங்க" என்று கைகூப்பி சிரிக்கிறார் சி.வி ராமசாமி. ■



# நலம் தரும் வரம் தரும் நல்லம்பாக்கம் சொர்ணலிங்கேஷ்வர்!

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட நல்லம்பாக்கம் ஊராட்சியில், நல்லம்பாக்கம், கண்டிகை, மல்ரோசாபுரம், காந்திநகர், அம்பேத்கர்நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகள் உள்ளன. இங்கு 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர்.

12ம் நூற்றாண்டில் நல்லம்பாக்கம் கிராமத்தில் தேவர்கள், சித்தர்கள், முனிவர்கள் இரவு நேரத்தில் வழிபட்டு வந்தனர். அவர்களுடன் சித்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அப்போது அவருக்கு சிவன் தரிசனமாகி கூறியதின்பேரில் அம்பேத்கர்நகரில் உள்ள குன்றில் சுமார் 300 ஆண்டு பழமையான சிவலிங்கத்தை எடுத்து அருகில் உள்ள 100அடி மலை உச்சியில் வைத்து சொர்ணலிங்கத்தை வழிபட்டு வந்தார். இங்கு கடந்த 1930ம் ஆண்டிலிருந்து பக்தர்கள் பூஜை செய்து வழிபட்டு வருகின்றனர்.

இங்கு மேற்கூரை இல்லாமல் ஆகாயத்தை பார்த்தபடி வெளியரங்கமாய் உள்ள சொர்ணலிங்கத்தின் மீது சூரியன் மற்றும் சந்திரனின் ஒளி நேரடியாக படுவதால் எத்தனையோ முறை மேற்கூரை அமைத்தும், அவை காற்றில் அடித்து கொண்டுபோய் விடுகிறது. இதனால் தடுப்பு போடவும் முடியவில்லை. மேலும் சிவலிங்கத்தை வழிபட மலை மீது வருபவர்கள் சிவனின் அனுமதி இல்லாமல் எளிதில் வரமுடியாது. அவர் அனுமதிப்பவர்கள் மட்டும் தான் வந்து அவரை வழிபட முடியும். திருமணம் ஆகாதவர்கள், குழந்தை இல்லாதவர்கள் இங்கு வந்து சிவனை வழிபட்டால் ஒரே மாதத்தில் திருமண பாக்கியம், குழந்தை பாக்கியம் கிடைக்கும், இதற்காக அமாவாசை, பவுர்ணமி, கிருத்திகை, பிரதோஷம் உள்ளிட்ட தினங்களில் இங்கு அதிக அளவில்



பக்தர்களும், பொதுமக்களும் குவிகின்றனர். கேட்கும் வரத்தை பக்தர்களுக்கு சிவன் அருள செய்கிறார். மேலும் மலை அருகில் உள்ள இரண்டு பக்கத்திலும் தாமரை நிறைந்த குளம் உள்ளது. இதில் உள்ள தண்ணீரை குடித்தால் நோய்கள் தீரும். மேலும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிவாச்சாரியர்களும் இங்கு வந்து வழிபட்டுவிட்டு செல்வது வழக்கம்.

சென்னை வண்டலூர் கேளம்பாக்கம் சாலையில் 7 கிமி தூரத்தில் உள்ள உள்ள கண்டிகையை அடுத்த நல்லம்பாக்கத்தில் 100 அடி மலை உச்சியில் உள்ள சிவலிங்கத்தை வழிபடுவதற்காக பக்தர்கள் திரளுகின்றனர்.

அடியார் திரு.சிவகுருநாதன் இந்த கோவிலை திறம்பட நிர்வகித்து, சிறப்பான முறைகளில் பூஜைகள் மற்றும் பிரதோஷ வழிபாடுகளை செய்து வருகிறார்.

**திருப்பணிக்கு உதவ நினைப்போர் தொடர்புக்கு: சிவத்திரு. குருநாதன் – 9094159323** ■



# திறமை யாருக்கும் இருக்கும்!

**ஜப்பானில் பத்து வயதுப் பையன் ஒருவன் இருந்தான். ஜூடோ சாம்பியனாக வேண்டும் என்பது அவனுடைய கனவு ஆனால், அவனுக்கு இடது கை கிடையாது....? கையும் காலும் வலுவாய் இருப்பவர்களுக்கே ஜூடோ சாம்பியன் ஆவது சிம்ம சொப்பனம்...!**

கையில்லா பையன் என்ன செய்வான்? பல மாஸ்டர்களிடம் போனான். எல்லோரும் அவனை பரிதாபமாய்ப் பார்த்துவிட்டு திருப்பி அனுப்பிவிட்டார்கள். கடைசியில் ஒரு குரு அவனுக்கு ஜூடோ கற்றுத் தர ஒப்புக் கொண்டார். பயிற்சி ஆரம்பமானது. குரு ஒரே ஒரு தாக்குதலை மட்டும் அவனுக்குக் கற்றுக் கொடுத்தார். நாட்கள், வாரங்கள், மாதங்கள் ஓடின. குரு வேறு எதையும் கற்றுக் கொடுப்பதாகத் தெரியவில்லை.

பையன் சோர்ந்து போனான். "குருவே, ஜூடோ சேம்பியன் ஆக இந்த ஒரு தாக்குதல் தெரிந்தால் மட்டும் போதாதே. வேறு எதுவும் சொல்லித் தருவீர்களா ? என்றான். "இந்த ஒரே ஒரு தாக்குதலில் நீ வல்லவன் ஆனால் போதும்" என்றார் குரு.

குரு சொல்லிவிட்டால் மறு பேச்சு ஏது. பையனும் பயிற்சியைத் தொடர்ந்தான். சாம்பியன்களுக்கான போட்டி ஆரம்பமானது! முதல் போட்டி. சர்வமும் கற்றுத் தேர்ந்த எதிராளி. மறுமுனையில் ஒரே ஒரு தாக்குதல் மட்டும் தெரிந்த இந்தப் பையன். போட்டி ஆரம்பமானது. எல்லோரும் ஆச்சரியப்படும் விதமாக பையன் வெற்றி பெற்றான்.

இரண்டாவது போட்டி. அதிலும் அவனுக்கே வெற்றி. அப்படியே முன்னேறி அரை இறுதிப் போட்டி வரை வந்தான். அதிலும் கொஞ்சம் போராடி ஜெயித்து விட்டான். கடைசிப் போட்டி. எதிரே இருப்பவன் பலமுறை சேம்பியன் பட்டம் பெற்றவன். ஒரு கை இல்லாத எதிராளியைப் பார்த்து அவனுக்கு கொஞ்சம் பரிதாபமும், இளக்காரமும். பையன் சளைக்கவில்லை. போட்டி ஆரம்பமானது. முதல் சுற்றில் பையனை அடித்து வீழ்த்தினான். பையனின் நிலையைக் கண்டு பார்வையாளர்களுக்கு அதிர்ச்சி போட்டியை நிறுத்திவிடலாமா என்கின்றனர் போட்டி நடத்துபவர்கள்.

"வேண்டாம் பையன் சண்டையிடட்டும்" என்கிறார் குரு. இந்தப் பையனோடு போரிட இனிமேல் பாதுகாப்புக் கவசம் தேவையில்லை என எதிராளி அலட்சியமாய் வந்திறங்கினான்.

பையன்தனக்குத்தெரிந்தஅந்தஒரேதாக்குதலை பலமாய் நிகழ்த்தினான். எதிராளி வீழ்ந்தான். பையன் சாம்பியனானான். பார்வையாளர்கள் நம்ப முடியாமல் பார்த்தார்கள், போட்டியாளர்களுக்கு ஆச்சரியம். அந்தப் பையனுக்கே தனது வெற்றியை நம்ப முடியவில்லை...!

அன்று மாலை குருவின் பாதங்களில் பணிந்த அவன் கேட்டான். குருவே நான் எப்படி இந்த போட்டியில் வெற்றி பெற்றேன்? ஒரே ஒரு தாக்குதலை மட்டும் வைத்துக் கொண்டு வெற்றி பெற்றிருக்கிறேனே என்றான்.


புன்னகைத்தபடியே குரு சொன்னார். உனது வெற்றிக்கு இரண்டு காரணங்கள். ஒன்று ஜூடோவிலுள்ள மிகக் கடுமையான ஒரு தாக்குதலை நீ கற்றுத் தேர்ந்திருக்கிறாய்.

இரண்டாவது இந்தத் தாக்குதலைத் தடுக்க வேண்டுமானால் எதிராளிக்கு ஒரே ஒரு வழி தான் உண்டு. உனது இடது கையைப் பிடிக்க வேண்டும். உனக்குத் தான் இடது கை கிடையாதே.

உன்னுடைய அந்த பலவீனம் தான் பலமானதாய் மாறி உன்னை சாம்பியன் ஆக்கியிருக்கிறது. குரு சொல்லச் சொல்ல பையன் வியந்தான். தனது பலவீனமே பலமாய் மாறிய அதிசயத்தை நினைத்து நினைத்து ஆனந்தித்தான். நமது மனம் திறமைகளின் கடல் அதில் முத்தெடுப்பதும் நத்தையெடுப்பதும் மூச்சடக்கி நாம் மூழ்குவதைப் பொறுத்தது.

ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கை தனித் தனித் திறமைகளைக் கொடுத்திருக்கிறது.

அனைவருக்கும் திறமை இருக்கிறது, அதை அறிந்து வெற்றி பெறுவோம்... ■



# கொரானா வரும்முன் காப்போம்!

**தமிழகத்தின் ஒவ்வொரு வீடும் கொரோனா தடுப்பு மையமாக மாறினால் கொரோனா பரவுவது தடுக்கப்படும்.**

எந்த அறிகுறியும் இல்லாமல் நமக்கு தெரியாமல் கொரோனா இருந்தாலும் குணமாகும். கொரோனாவை வராமல் தடுக்கவும், கொரோனாவை குணப்படுத்துவும் மருத்துவ முறைகள்.

1. **அக மருத்துவங்கள் – 10**
2. **புற மருத்துவங்கள் – 10**
3. **சுற்றுப்புற தூய்மை – 10**
4. **நோய் எதிர்ப்பு உணவுகள் – 5**
5. **எளிய பயிற்சிகள் – 3**
6. **அழகிய வாழ்வியல் முறை – 3**

இந்த 41 வழிமுறைகளை கடைப்பிடித்தால் கொரோனா இல்லா தமிழகம் உருவாகும். கொரோனா இருப்பவர்களுக்கு குணமாகும், இல்லாதவர்களுக்கு வராது, நாளுக்குநாள் பரவுவது உடனடியாக தடுக்கப்படும்.

வாங்க இப்ப அக மருத்துவத்தில் எத்தனை மருந்துகள் உள்ளது? எப்படி தயாரித்து பயன்படுத்துவது அதன் பலன்கள் என்று பார்ப்போம்.

### அக மருத்துவங்கள்:

1.கேரள வைத்தியரின் கசாயம், 2.சித்த மருத்துவர் வீரபாபுவின் மூலிகை தேனீர், 3.கபசுரக்குடிநீர், 4.நிலவேம்பு குடிநீர், 5.Ph சமானி, 6.அஸ்வகந்தி சூரணம், 7.தாளிசாதி சூரணம், 8.திரிகடுகு தேனீர், 9.ஆடாதோடை மணப்பாகு, 10.இரு மூலிகை கசாயம்.

### குறிப்பு:

பத்து மருந்தும் ஒரே நேரத்தில் எடுக்க தேவை இல்லை, எடுக்கவும் கூடாது, வாரம் ஒரு மருந்து என 10 வாரம் கடைப்பிடித்தல் சிறப்பு. அல்லது இரண்டு மருந்தை ஒரே நேரத்தில் காலை மாலை என எடுக்கலாம். எந்த உடல் உபாதையும் இல்லாதவர்கள் கூட, ஒரு மருந்தை 7 நாட்கள் காலை மாலை என இரண்டு வேளை குறிப்பிடப்பட்டுள்ள முறையில் எடுக்கலாம்.நுரையீரல் பாதிப்பு உள்ளவர்கள் இதே முறையில் 3 வேளை எடுக்கலாம்.

10 வாரம் நிறைவு பெறும் போது நீங்கள் நோய் எதிர்ப்பு ஆற்றல் மிக்கவராய் மாறுவீர்கள். இதில் ஒவ்வொருவருக்கும் ஒரு சில மருந்தில் சில நாட்களிலேயே கொரானா நெகட்டிவாகிவிடும்.

### புற மருத்துவங்கள்:

11. நல்லெண்ணெய் கொப்பளித்தல், 12. பல் துலக்குதல், 13. வாய் கொப்பளித்தல், 14. கிருமி நாசினி தைலம், 15. வேது பிடித்தல், 16. நுகர்தல் மூலிகை பொட்டலம் / இயற்கை இன்ஹேலர், 17. கை கழுவ கிருமி நாசினி திரவம், 18. காப்பு கயிறு (கையில் கட்ட), 19. சூரிய குளியல், 20. மருதாணி வைத்தல்.

### சுற்றுப்புற தூய்மை:

21. மூலிகை சாப்பிராணி தூபம், 22. அக்னி ஹோத்திரம், 23. விளக்கு ஏற்றுதல், 24. வாசல் தெளித்தல், 25. தரை சுத்தி, 26. மா இலை வாசல் காப்பு, 27. தேவை இல்லாத பொருட்களை வெளியேற்றுதல், 28. வீட்டை தூய்மையாக வைத்தல், 29. காற்றோட்டமாக வைத்தல், 30. பிடித்த இறைவன் பாடல்கள் மற்றும் மந்திரங்களை வீடுகளில் ஒலிக்கச்செய்தல்.

### நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்க உணவு முறைகள்:

31.வைட்டமின் சி உணவுகள், 32.நுரையீரல் தூய்மைப்படுத்தும் ரசங்கள், 33.கிருமி வைரசுகளை அழிக்கும் அரிசி, 34.கசப்பு உணவுகள், 35.சமச்சீர் உணவு முறை

### எளிய பயிற்சிகள்:

36.மூச்சு பயிற்சி, 37. பிரம்ம முகூர்த்த நடை பயிற்சி, 38. தியானம்.

### அழகிய வாழ்க்கை முறை:

39.உணவு உண்ணும் நேரம் உறங்கும் நேரம், 40.குளியல் முறை, 41.தவிர்க்க வேண்டிய பொருட்கள்.

### நோய் தீர்க்கும் கஷாயம்:

**தேவையான பொருட்கள்:**

சீரகம் - 1 டி ஸ்பூன்

மிளகு - 10 எண்ணிக்கை

பூண்டு - 5 பல்

பொட்டுகல்லை - 3 ஸ்பூன்

இஞ்சி - 1 அங்குலம்

எழுமிச்சை - 1/2 பழம் (தோலுடன் விதை நீங்கியது)

லவங்க பட்டை - 1 அங்குலம்

மஞ்சள் தூள் - 1 சிட்டிகை

கல் உப்பு - 1 ஸ்பூன்

### செய்முறை:

இதில் உள்ள பொருட்களில் எதையுமே இடிக்கவே பொடி செய்யவோ கூடாது. அனைத்து மூல பொருட்களையும் அப்படியே 5 டம்ளர் தண்ணீரில் போட்டு 3 டம்ளராக கொதிக்க வைத்து வடித்து இளம் சூடாக பெரியவர்கள் 1 டம்ளர் அளவும் சிறுவர்கள் 1/2 டம்ளர் அளவும் காலை மாலை என இரண்டு வேளை உணவிற்கு முன் பருகலாம். 3 வேளை பருகினாலும் நலமே. நமக்கு தெரியாமல் கொரோனா தொற்று இருந்தாலும் இந்த கசாயம் குணமாக்கிவிடும்.

### தீரும் நோய்கள்:

கொரோனா +ve ஐ 7 நாட்களில் நெகட்டிவ் ஆக்கிவிடும் இம்மருந்து.

### மூலிகைத் தேனீர்:

சுக்கு - 100 கிராம்

அதிமதுரம் - 100 கிராம்

சித்தரத்தை - 30 கிராம்

கடுக்காய் தோல் - 30 கிராம்

மஞ்சள் - 10 கிராம்

திப்பிலி - 5 கிராம்

ஓமம் - 5 கிராம்

கிராம்பு - 5 கிராம்

கற்பூரவள்ளி இலை - 5 எண்ணிக்கை

புதினா இலை - 10 எண்ணிக்கை

மிளகு - 5 கிராம்

நாட்டு சர்க்கரை - 1 தேக்கரண்டி

### செய்முறை:

இதில் நாட்டு சர்க்கரையை, கற்பூரவள்ளி இலை புதினா இலை தவிர மீது உள்ள அனைத்து மூலப்பொருட்களையும் தனித்தனியாக இடித்து பொடி செய்து ஒன்றாக கலந்து வைத்துக்கொள்ளவும்.

10 கிராம் பொடியை 400 மிலி நீரில் போட்டு 100 மிலி நீர் ஆகும் வரை கொதிக்க வைக்கவும். கொதிக்கும் போது அதில் கற்பூரவள்ளி இலை புதினா இலை போட்டு, இறக்குவதற்கு முன் நாட்டு சர்க்கரை கலந்து வடித்து இளம்சூடாக பெரியவர்கள் 100 மிலியும் சிறியவர்கள் 50 மிலி என இரண்டு வேளை காலை மாலை உணவிற்கு பின்பு அருந்தலாம்.

### தீரும் நோய்கள்:

கொரோனா அறிகுறிகளை குணமாக்கும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

### கபசுரக்குடி நீர்:

1.சுக்கு - 35 கிராம்

2 .திப்பிலி - 35 கிராம்

3.இலவங்கம் - 35 கிராம்

4.சிறுகாஞ்சொரிவேர் - 35 கிராம்

5.அக்கிரகாரம் - 35 கிராம்

6.முள்ளிவேர் - 35 கிராம்

7.கடுக்காய்த்தோல் - 35 கிராம்

8.ஆடாதோடை - 35 கிராம்

9.கற்பூரவள்ளி இலை - 35 கிராம்

10.கோஷ்டம் - 35 கிராம்

11.சீந்தில் கொடி - 35 கிராம்

12.சிறுதேக்கு - 35 கிராம்

13.நிலவேம்பு சமூலம் - 35 கிராம்

14.வட்டத்திருப்பி (பாடக்கிழங்கு) - 35 கிராம்

15.முத்தக்காசு (கோரைக் கிழங்கு) 35 கிராம்

### கபசுரகுடிநீர் சூரணம் செய்முறை:

சுத்தமான உலர்ந்த சரக்குகளை ஒன்றிரண்டாகப் பொடித்து நன்கு கலந்தால் கபசுரக் குடிநீர் சூரணம் தயார். இப்பொழுது இச்சூர்ணத்தை வைத்து கபசுர குடிநீர் எப்படி தயார் செய்து பயன்படுத்துவது என பார்ப்போம்.

### கபசுரக் குடிநீர் செய்முறை:

35 கிராம் குடிநீர் சூரணத்தை 3 லிட்டர் நீரில் போட்டு சிறுதீயில் காய்ச்சி பன்னிரண்டிலொன்றாய் குறுக்கி வடிகட்டி குடிநீர் எடுக்கவும். 250னீரீ கபசுரக் குடிநீர் கிடைக்கும்.

**அளவு:** சிறியவர்கள் 30 மி.லி. பெரியவர்கள் 60 மி.லி. வீதம் தினமும் இரண்டு அல்லது மூன்று வேளைகள் குடிக்கலாம்.

குடிநீர் ஆயுட்காலம் 2.30 மணி நேரம்

### தீரும் நோய்கள்:

கிருமி மற்றும் வைரசால் ஏற்படும் அனைத்து நுரையீரல் தொற்று நோய்கள் (கபசுரம்)

1.நிலவேம்பு - 10 கிராம்

2.வெட்டிவேர் - 10 கிராம்

3.விலாமிச்சுவேர் - 10 கிராம்

4.சந்தனச்சிறாய் - 10 கிராம்

5.பேய்புடல் - 10 கிராம்

6.கோரைக்கிழங்கு - 10 கிராம்

7.சுக்கு - 10 கிராம்

8.மிளகு - 10 கிராம்

9.பற்ப்படாகம் - 10 கிராம்

### செய்முறை:

நிலவேம்பு முதலான சரக்குகளை குப்பை நீக்கி சுத்தம் செய்தபிறகு கல்வத்திலிட்டு ஒன்றிரண்டாக இடித்து எடுத்துக்கொள்ளவும். 90 கிராம் அளவுள்ள சூரணத்திற்கு 2 லிட்டர் சுத்தமான நீர் விட்டு 15 நிமிடங்கள் ஊறவிட்டு பிறகு அடுப்பேற்றி குறைந்த நெருப்பில் கொதிக்கவிடவும். நான்கில் ஒரு பங்காக அதாவது 1/2 லிட்டர் அளவிற்கு குடிநீர் வற்றியவுடன் நன்கு வடிகட்டி சேகரிக்கவும்.

**அளவு:** காலை உணவிற்கு முன்பு சிறியவர்களுக்கு 30 மிலி அளவும், பெரியவர்களுக்கு 60 மிலி அளவும் குடிக்க வேண்டும்.

குடிநீரின் ஆயுட்காலம்: ஒரு சாமம், அதாவது இரண்டரை மணி நேரம் ஆகும். நிலவேம்பு குடிநீர் சூரணம் நாட்டு மருந்து கடைகளில் பெற்றும் பயன்படுத்தலாம்.

### யாரெல்லாம் நிலவேம்பு மற்றும் கபசுரக்குடிநீர் குடிக்க கூடாது

ஒரு வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் டைபாய்டு சுரம் மற்றும் வயிற்றுப்போக்கு உள்ளவர்கள். முதல் மூன்று மாத கர்பிணிகள். வயிற்றில் புண் உள்ளவர்கள் வெறும் வயிற்றில் குடிக்க வேண்டாம் (உணவிற்கு பின் குடிக்கலாம்)

நாட்பட்ட நோய் உள்ளவர்கள் சித்த மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் குடிக்கலாம்.

1. அஸ்வகந்தி - 640 கிராம்
2. சுக்கு - 320 கிராம்
3. திப்பிலி - 160 கிராம்
4. மிளகு - 80 கிராம்
5. ஏலம் - 40 கிராம்
6. சிறு நாகப்பூ - 20 கிராம்
7. இலவங்கம் - 10 கிராம்
8. பனங்கற்கண்டு - 1280 கிராம்

### செய்முறை:

பனங்கற்கண்டை தவிர இவற்றை அனைத்தையும் தனித்தனியாக வறுத்து தனித்தனியாக இடித்து துணியில் சலித்து ஒன்றாக கலந்து பின் பனங்கற்கண்டு பொடி சேர்த்தால் சூரணம் தயார்

### பயன்படுத்தும் முறை:

பெரியவர்கள் 1 டிஸ்பூன் சிறுவர்கள் 1/4 டிஸ்பூன் நெய், தேன் அல்லது பாலில் கலந்து காலை மற்றும் மாலை உணவிற்கு பின்பு எடுக்கலாம்.

### தீரும் நோய்கள்:

இரத்த சோகை நீங்கும், உடல் பலம் பெரும், கெட்ட நீர் வெளியேறும், தாது பலம் பெரும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

1. தாளீசபத்திரி - 10 கிராம்

2. மிளகு - 20 கிராம்

3. சுக்கு - 30 கிராம்

4. திப்பிலி - 40 கிராம்

5. குகைநீர் - 50 கிராம்

6. ஏல அரிசி - 5 கிராம்

7. இலவங்கப்பட்டை - 5 கிராம்

8. பனங்கற்கண்டு - 320 கிராம்

### செய்முறை:

அனைத்தையும் தனித்தனியே இடித்து துணியில் சலித்து ஒன்றாக கலந்தால் தாளீசாதி சூரணம் தயார். (ஏல அரிசி என்பது ஏலக்காயை உடைத்தால் உள்ளே கருப்பாக இருக்கும் பொருளைத்தான் ஏல அரிசி என்பார்கள், குகை நீர் என நாட்டு மருந்து கடையில் கேட்டால் கிடைக்கும்)

### பயன்படுத்தும் முறை:

1 முதல் 3 கிராம் அளவு தேன், நெய் அல்லது வெந்நீரில் கலந்து எடுக்கலாம். பெரியவர்கள் 3 கிராம், சிறியவர்கள் 1 கிராம் காலை மாலை இரண்டு வேளை சாப்பிட்ட பின் எடுக்கலாம்.

### தீரும் நோய்கள்:

இருமல், இழைப்பு, ஜலதோஷம், சுரம், நெச்சு சளி.

## திரிகடுகு தேனீர்:

### தேவையான பொருட்கள்:

1. சுக்கு - சிறு துண்டு

2. மிளகு - 1/2 தேக்கரண்டி

3. திப்பிலி - 2 எண்ணிக்கை

4. செம்பரத்தி - 3 பூவின் இதழ்

5. புதினா - 1 கைப்பிடி

### செய்முறை:

இவை அனைத்தையும் 250 மிலி நீரில் கொதிக்க வைத்து 100 மிலி ஆன பிறகு வடித்து பெரியவர்கள் 100 மிலி சிறியவர்கள் 50 மிலி காலை மாலை உணவிற்கு முன் பருகலாம்.

### தீரும் நோய்கள்:

மூச்சுத்திணறல், வீசிங்.

இது ஆடு தொடாத இலை என்பதால் இதற்கு ஆடாதொடை என பெயர்.

ஆடாதொடை சாப்பிட்டால் பாடாத நாவும் பாடும் என்பது சித்தர் வாக்கு.

சுவையும் மணமும் கொண்ட மருந்துப் பானகத்திற்கு மணப்பாகு என்று பெயர்.

### தேவையான பொருட்கள்:

1. ஆடாதொடை இலை - 2 கிலோ

2. வெல்லம் - 1 கிலோ

3. தண்ணீர் - 4 லிட்டர்

### செய்முறை:

ஆடாதொடை இலையை சுத்தம் செய்து 4 லிட்டர் தண்ணீரில் போட்டு அடுப்பிலேற்றி கொதிக்க வைத்து ஒரு லிட்டராக சுண்ட வேண்டும், பிறகு இதை வடித்து, இலை கசாயத்தை எடுத்து அதில் வெல்லம் சேர்த்து பாகு பதத்திற்கு காய்ச்சி இறக்கினால் சுவையான ஆடாதொடை மணப்பாகு தயார்.

ஆயுட்காலம்: காற்று புகாத கண்ணாடி பாட்டலில் சேமித்தால் ஆறு மாத காலம் கெடாது.

### பயன்படுத்தும் முறை:

சிறுவர்கள் - 5 மிலி

பெரியவர்கள் - 10 மிலி

வெந்நீரில் கலந்து காலை மாலை இரண்டு வேலை உணவிற்கு முன் குடிக்கலாம்.

### தீரும் நோய்கள்:

நாட்பட்ட நெஞ்சு சளி, இருமல், தொண்டை வலி, வீசிங், ஆஸ்துமா போன்ற பல்வேறு நுரையீரல் பிரச்சனைகளை இது குணப்படுத்தும்.

## இரு மூலிகை கசாயம்:

தூதுவளை - 1 தேக்கரண்டி

முசுமுசுக்கை - 1 தேக்கரண்டி

சுக்கு - சிறிதளவு

மிளகு - 1/2 டி ஸ்பூன்

திப்பிலி - 3 எண்ணிக்கை

### செய்முறை:

இவை அனைத்தையும் 250 மிலி நீரில் கொதிக்க வைத்து 100 மிலி ஆனதும் வடித்து காலை மாலை உணவிற்கு முன் பெரியவர்கள் 100 மிலி சிறுவர்கள் 50 மிலி எடுக்கலாம்.

### தீரும் நோய்கள்:

மூச்சுத்திணறல், ஆஸ்துமா நீங்கும். ■

தமிழக சட்டமன்றத் தேர்தல்...

# கட்சிகள் போடும் கணக்கு..!



**தமிழக அரசியல் களம் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இப்போது பரபரப்படைந்துள்ளது.**

தமிழக அரசியலில் மகத்தான சக்திகளாக விளங்கிய புரட்சித்தலைவி. ஜெயலலிதா அவர்களும், கலைஞர். கருணாநிதி அவர்களும் இல்லாத அரசியல் களம், சாணக்கியரும் சாதனையாளரும் இல்லாத நிலையிலும் விறு விறுப்படைந்துள்ளது.

தமிழக அரசியலில் ஆட்சி அதிகாரத்தை தீர்மானித்திடக் கூடிய கட்சிகளாக இன்றுவரை அ.தி.மு.க.வும் தி.மு.க.வுமே இருந்து வருகிறது, தேசிய அரசியல் என்றால் இன்று பா.ஜ.க.வும் காங்கிரசும் மட்டுமே பிரதான கட்சிகளாக உள்ளன என்றாலும் காங்கிரசின் அடையாளம் நாளுக்கு நாள் அழிந்து கொண்டுள்ள நிலையில் பா.ஜ.க.வின் வியூகம் தேசத்தில் அதன் வளர்ச்சியை அதிகரித்துக் கொண்டுள்ளது.

நேற்றுவரை தமிழக அரசியலில் அதிக கவனம் செலுத்தாமல் இருந்த பா.ஜ.க. இத் தேர்தலின் மூலம் தமிழகத்தில் தனது தடத்தை அழுத்தமாக பதித்திட முடிவு செய்துள்ளது.

தமிழகத்தில் அரசியல் கூட்டணி என்பது தி.மு.க.வுடனான, அ.தி.மு.க.வுடனானதாக மட்டுமே இருக்க முடியும், தற்போது ஆட்சி அதிகாரத்திலும், அதிகபட்ச தொண்டர்களுடனான கட்சியாக இருக்கும் அ.தி.மு.க.வின் அணியையே தேர்தல் கூட்டணிக்கு பா.ஜ.க. தேர்வு செய்யலாம், நேற்றுவரை அ.தி.மு.க.வில் இருந்த நிலை இப்போதில்லை, எல்லாவற்றுக்கும் மேலாக மகத்தான சக்தியாக விளங்கிய ஜெ இன்றில்லை என்பது பா.ஜ.க.விற்கு சாதகமான நிலையை உருவாக்கி இருப்பதாகவே அக்கட்சி உணர்கிறது, நீயா நானா என்று இன்றுள்ள இரண்டு



பிரபலங்களும் மோதிக்கொண்டுள்ள நிலையில், அ.தி.மு.க.வை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியும் என்று நினைக்கும் பா.ஜ.க.,அ.தி.மு.க. கூட்டணியை தனது வளர்ச்சிக்காக, தமிழகத்தில் வேரூன்றுவதற்காக பயன்படுத்த முடிவெடுத்திருப்பதாகவே தெரிகிறது.

அ.தி.மு.க.வில் நடக்க ஆரம்பித்துள்ள

உட்கட்சிப் பூசல் பா.ஜ.க.வின் எண்ணத்தை ஈடேற்றும் வகையில் உள்ளது, அ.தி.மு.க.வில் நடக்கும் உட்கட்சிப் பூசலுக்கு பின்னணியில் பா.ஜ.க. இருப்பதாகவும் பேசப்படுகிறது, ஓ.பி.எஸ். மோடியிடம் சென்று பேசப்போவதாக கசிந்த தகவலே இதை உறுதியாக்குகிறது.

அ.தி.மு.க. வுடன் கூட்டணி என்ற நிலைக்கு வரும் பா.ஜ.க. குறைந்த பட்சம் 40 தொகுதிகளையாவது பெறுவதுடன் ஆட்சியில் பங்கும் கேட்க முடிவு செய்துள்ளதாம், பா.ஜ.க. கணக்கின் படி அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைந்து வெற்றி பெற்றால், மீண்டும் அமையப்போகும் ஆட்சியில் பா.ஜ.க. பங்கேற்கும் அதன் வழியாக தமிழகத்தில் அழுத்தமாக தடம் பதிக்கும்... இது, பா.ஜ.க.வின் கணக்கு.







தமிழக அரசியலில் இருக்கும் இடம் தெரியாத அளவிற்கு மறைந்து கொண்டிருக்கும் கட்சியாக காங்கிரஸ்...

கட்சிக்குள் இருந்த பிரபலங்களில் பலர் வெளியேறி விட, இருக்கும் சிலருக்குள்ளும் ஒற்றுமை இல்லாமல் போனதால் எந்த ஒரு தொகுதியிலும் தனித்து நின்று வெற்றிபெற முடியாத நிலையில் உள்ள காங்கிரஸ் கட்சி தேர்தலில் தி.மு.க.வை சார்ந்தே இயங்க வேண்டிய நிலைக்கு தள்ளப் பட்டுள்ளது, நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வால் தமக்கு கிடைத்த வெற்றியை நினைத்து சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கொடுக்கும் தொகுதிகளில் திருப்தி அடையும் நிலையில்தான் இப்போது காங்கிரஸ் தலைமை உள்ளது, இடையில் இங்குள்ள ஒரு சிலர் அதிக இடம், ஆட்சியில் கூட்டு என்று பேசுவதெல்லாம் முடிந்தவரை அதிகமான சீட்களை வாங்க வேண்டும் என்ற கணக்கில்தான்.

இரண்டு தேசிய கட்சிகளையும் தாங்கிப் பிடித்துக் கொண்டிருப்பது தி.மு.க., அ.தி.மு.க. என்ற இரண்டு கட்சிகள்தான், இதில் தற்போது ஆட்சியில் உள்ள அ.தி.மு.க. மீண்டும் ஆட்சியைப் பிடித்து விட பல்வேறு கணக்குகளைப் போட்டு வருகிறது, இருந்தாலும் கட்சிக்குள் ஆரம்பித்துள்ள பூசல் தொண்டர்களிடையே சோர்வை உண்டாக்கி வருகிறது என்பதே உண்மை.

ஜெ விற்குப் பின் அ.தி.மு.க. என்ற கட்சியே இருக்காது என்று நினைத்துக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் ஆச்சரியப்படும் வகையில் முதல்வர். எடப்பாடியார் மூன்றாண்டு காலம் ஆட்சியை வெற்றிகரமாக கொண்டு சென்றுள்ளார், அரசியலின் அத்தனை நெளிவு சுளிவுகளையும் தெரிந்து, மக்களிடமும் பெருமளவில் அதிருப்தி உண்டாகாத வகையில் ஆட்சியை கொண்டு சென்றுள்ளார்,

இப்போதுள்ள சூழலில், அ.தி.மு.க., பா.ம.க., பா.ஜ.க., தே.மு.தி.க. வுடன் இக்கூட்டணியை ஆதரிப்பதற்கு தயாராக உள்ள அமைப்புகளின் துணையோடு மீண்டும் ஆட்சியைப் பிடித்து விட முடியும் என்று கணக்கு போட்டுக் கொண்டிருக்கிறது அ.தி.மு.க., ஆனால், ஜெ இருந்த காலத்தில் கட்சி நிர்வாகிகள் இருந்தது போல் இன்றில்லை என்பது அ.தி.மு.க.வின் பலவீனமாக உள்ளது, நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. தோல்வி அடைந்ததற்கு அக்கட்சியில் உள்ள நிர்வாகிகள் பலரின் துரோகம் என்று கூட சொல்லலாம், அதேபோல் சில மாவட்ட நிர்வாகிகள் மாவட்டத்தில் தன்னை விட யாரும் வளர்ந்து விடக்கூடாது என்று நினைக்கும் மனப்போக்குடனே உள்ளனர், மாவட்டத்தில் தனக்கு நிகராக யாரும் வளர்ந்து விடக்கூடாது என்ற எண்ணத்தில் இருக்கும் இவர்களால் உள்ளடி நடைபெறுவதற்கு நிறையவே வாய்ப்புண்டு, பக்கத்து தொகுதிகளில் போட்டியிடும் தம் கட்சியினர் வெற்றிபெற்று விடக்கூடாது என்று எதிர்க்கட்சியுடன் மறைமுக பேரம் வைத்துக்கொள்ளும் போக்கும் சில மாவட்ட நிர்வாகிகளிடம் உருவாகியுள்ளது.

இந்த நிலையிலும் எப்படியும் மீண்டும் ஆட்சியில் அமர்ந்து விட முடியும் என்று முதல்வர்

நினைத்துக் கொண்டிருக்க, ஓ.பி.எஸ் உண்டாக்கி வரும் குழப்பம் ஒட்டு மொத்த அ.தி.மு.க.வினரையும் பலவீனப் படுத்தியுள்ளது.

கட்சியிலும், மக்களிடத்திலும் எடப்பாடியாருக்கு செல்வாக்கு இருப்பதை வைத்து இரண்டாம் கட்ட தலைவராக இருந்து கட்சியை வழி நடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பு ஓ.பி.எஸ்சுக்கு இருந்தும், தனக்கு முதல்வர் பதவி இல்லை என்றால் கட்சியே அழிந்தாலும் கவலையில்லை என்ற எண்ணம் கொண்டு அவர் செயல்பட ஆரம்பித்திருப்பது எதிர்க்கட்சிக்கு குஷியை ஏற்படுத்தியுள்ளது என்றே சொல்ல வேண்டும், எடப்பாடியார் ஆட்சியார் மீது நம்பிக்கை வாக்கெடுப்பு நடந்தபோது, அந்த ஆட்சி அ.தி.மு.க.ஆட்சி என்ற உணர்வு கூட இல்லாமல் தி.மு.க.வுடன் சேர்ந்து அ.தி.மு.க.ஆட்சியைக் கவிழ்க்க முயற்சித்த ஓ.பி.எஸ். இப்போது என்ன செய்யப் போகிறார் என்பது பெரும் கேள்வியாக இருந்தாலும், பா.ஜ.க.வின் ஆதரவு நமக்கிருக்கும் போது என்ன கவலை என்று நினைக்கிறதாம் அ.தி.மு.க. தலைமை.

பா.ஜ.க.வின் வழிகாட்டுதலும், அது அமைக்கப் போகும் வியூகமும் தமிழகத்தில் மீண்டும் அ.தி.மு.க. ஆட்சி அமைக்க வழிவகுக்கும் என்பது அ.தி.மு.க.வின் கணக்காக உள்ளது.







2021 தேர்தலை ஒட்டி ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு கணக்குப் போட்டுக் கொண்டிருக்க தி.மு.க. எப்போதோ தன் பணியை ஆரம்பித்து விட்டது, தேர்தல் வெற்றிக்குரிய வியூகம் அமைப்பதற்காகவே பிரசாந்த் கிஷோருக்கு கோடிக்கணக்கில் பணம் கொடுத்து தேர்தல் பணியை ஆரம்பித்துள்ளது தி.மு.க., நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.கூட்டணிக்கு கிடைத்த வெற்றி சட்டமன்றத் தேர்தலிலும் தொடரும் என்று அதன் தலைமையை நம்ப வைத்துள்ளது,

தி.மு.க.வுடன் காங்கிரஸ், கம்யூனிஸ்ட்டுகள், வி.சி., ம.தி.மு.க., முஸ்லிம் லீக் என்று இன்றுவரை இணைந்தே உள்ளனர், காங்கிரஸ் தி.மு.க.வை விட்டு விலகும் நிலையில் இல்லை, அதேபோல் கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலேயே 25 கோடி ரூபாயை பெற்றுக் கொண்டு கூட்டணியில் இணைந்த கம்யூனிஸ்ட்டுகள் சட்டமன்றத் தேர்தலிலும் தி.மு.க. கொடுக்கப்போகும் கோடிகளிலும், தொகுதிகளிலும் திருப்தி அடைந்து விடுவார்கள், முஸ்லிம் லீக்கை பொறுத்தவரை அவர்கள் தி.மு.க.வுடன் நிலைத்த உறவு கொண்டவர்கள் என்பதால் அவர்களும் தி.மு.க. கூட்டணியில் தொடர்வார்கள் என்ற நிலையில் தி.மு.க. கூட்டணியில் வேண்டாத விருந்தாளிகளாக இருப்பவர்கள் வி.சி.க.வும் ம.தி.மு.க.வும்தான்.

வி.சி.க.வைதி.மு.க.தலைமையில் உள்ள பெரும்பான்மையானவர்களே விரும்ப வில்லையாம், தி.மு.க.வின் கீழ்மட்ட நிர்வாகிகள் அளித்து வரும் தகவல் கூட்டணியை விட்டு வி.சி.க.வை தள்ளி வைக்க வேண்டும் என்ற எண்ணத்தை மேல்மட்டத்திடம் உருவாக்கியுள்ளதாம், அதனால் வி.சி.க.விற்கு ஒற்றை இலக்கத்தில் சீட்டுகளை ஒதுக்குவது, அதை ஏற்காமல் கூட்டணியை விட்டு வி.சி.க. விலகினால் அதுபற்றி கண்டு கொள்ளாமல் விட்டு விடுவது என்ற முடிவில் தி.மு.க.தலைமை உள்ளதாம். இதேபோல்தான் ம.தி.மு.க.வின் மீதான நிலையாகவும் உள்ளதாம்.

தொண்டர்கள் பலத்தையும் மக்கள் செல்வாக்கையும் இழந்து விட்ட ம.தி.மு.க.விற்கும் ஒற்றை இலக்கத்திலேயே தொகுதிகளை ஒதுக்க முடிவு செய்துள்ளதாம் தி.மு.க.தலைமை, அதை ஏற்றுக் கொண்டு கூட்டணியில் இருந்தால் இருக்கட்டும் இல்லாமல் போனாலும் போகட்டும் என்ற முடிவிற்கு வந்துள்ள தி.மு.க.தலைமை என்ன விலை கொடுத்தாவது பா.ம.க.வையும் தே.மு.தி.க.வையும் தன் கூட்டணிக்கு கொண்டு வரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாம்,

பா.ம.க.வும், தே.மு.தி.க.வும் வராத பட்சத்தில் த.வா.க, கொங்கு வேளாளர் கட்சி, சீமான் போன்றவர்களை தம்முடன் இணைத்துக் கொண்டு தேர்தலை சந்தித்து ஆட்சியைக் கைப்பற்ற கணக்கு போடுகிறதாம் தி.மு.க.தலைமை.



தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் பல்வேறு கணக்குகளைப் போட்டுக் கொண்டுள்ளும் நிலையில், ஜெவும் கருணாநிதியும் இல்லாத அரசியல் களமாகியுள்ள தமிழகத்தில் கூட்டணி ஆட்சிக்கு இதுதான் சரியான நேரம் என்று நினைக்கிறதாம் பா.ம.க.தலைமை அதனால் தேர்தல் கூட்டணி ஆட்சியிலும் தொடர வேண்டும் என்று நினைக்க ஆரம்பித்துள்ள பா.ம.க.வின் முடிவிற்கு சம்மதம் தெரிவிக்கும் கட்சியுடன்தான் கூட்டணி என்பது பா.ம.க.வின் கணக்காக உள்ளதாம், பெரும்பான்மை இல்லாத காலத்தில் மிகப்பெரும் வெற்றி பெற்றிருந்த காங்கிரஸை ஒதுக்கி வைத்து தி.மு.க. ஆட்சி நடத்தியதை மறக்காத பா.ம.க., அதுபோன்ற நிலைக்கு இக்காலத்தில் இடமளித்து விடக்கூடாது என்ற முடிவுடன் இருக்கிறதாம், அ.தி.மு.க.வோ தி.மு.க.வோ எந்தக் கட்சி ஆட்சியில் இடமளிக்கிறதோ அந்தக் கட்சியுடன் கூட்டணி என்று கணக்கு போட்டுள்ளதாம் பா.ம.க.



பா.ஜ.க., காங்கிரஸ், அ.தி.மு.க., தி.மு.க., பா.ம.க. என்று ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு கணக்குப் போட்டுக் கொண்டிருக்க, கம்யூனிஸ்ட்டுகள் தி.மு.க.வுடன் கூட்டணி என்ற நிலையோடு இருக்க, ம.தி.மு.க., வி.சி.க.வின் நிலைமை என்பது தேர்தலின் வேட்பு மனுக்கள் வாபஸ் பெறும் வரை இழுபறியாகவே இருக்கும் என்பதே இன்றைய அரசியல் நிலையாக உள்ளது.

இந்த நிலையில், 2021 தேர்தல் வேறு ஒரு வருகையையும் எதிர்கொள்ள இருக்கிறது, அந்த வருகை... ரஜினிகாந்த்.

இன்றுவரை வருவேன் வருவேன் என்று சொல்லிக் கொண்டிருக்கும் ரஜினி, இன்றுவரை வராமல் இருப்பதற்கு ஒரே காரணம் தி.மு.க., அ.தி.மு.க. என்ற இரண்டு கட்சிகளை எதிர்த்து அரசியல் செய்ய முடியாது என்ற அச்ச உணர்வுதான், அந்த உணர்வு ஜெ, கருணாநிதி இல்லாத இக்காலத்தில் மாற்றம் பெற்றிருக்கிறது என்பதே உண்மை.

ரஜினியை முன்னிறுத்தி அரசியல் செய்ய பா.ஜ.க.வும் நினைத்துக் கொண்டுள்ளது, ரஜினியை தனியே கட்சி ஆரம்பிக்க வைத்து அக்கட்சிக்கு நட்பாக தோழமையாக இருந்து தமிழகத்தின் அரசியலை வேறு திசை நோக்கி, 2021 ல் கூட்டணி ஆட்சியை ஏற்படுத்த பா.ஜ.க. போட்டுள்ள கணக்கு ரஜினிக்கு அரசியலின் மீதான எண்ணத்தை அதிகரித்துள்ளதாம், அதனால் விரைவில் ரஜினியின் தலைமையில் புதிய கட்சி உருவெடுக்கும் என்பது உறுதியாகியுள்ளது, ஆட்சியில் பங்கு என்ற நிலைப்பாடு கொள்ளும் கட்சியுடன் கூட்டணி என்று கணக்கு போட்டுள்ள ரஜினிக்கு அதற்குரிய வாய்ப்பினை பா.ஜ.க. உருவாக்கிக் கொடுக்கும் என்பதே இன்றைய அரசியல் நிலை.

இந்த நிலையில், கேள்விக்குரிய ஒரு கட்சியாக இருப்பது இப்போது தே.மு.தி.க.தான், தமிழக அரசியலில் மகத்தான சக்தியாக உருவான தே.மு.தி.க. இன்று தொண்டர்களை இழந்து, செல்வாக்கினை இழந்து தி.மு.க.வின் தயவையும் அ.தி.மு.க.வின் தயவையும் எதிர்ப்பார்க்கிற நிலைக்கு தள்ளப் பட்டுள்ளது, சொந்த பலம் இல்லாத கட்சிகள் செல்வாக்குள்ள கட்சியின் நிழலைத் தேடுவதுபோல் வரும் தேர்தலில் தே.மு.தி.க.வின் நிலை எப்படியும் மாறலாம் என்பதே இன்றைய அரசியல் நிலை.

பிரதான கட்சிகளின் நிலை இவ்வாறு இருக்க, இறுதி நேரத்தில் எதுவும் நடக்கலாம் என்பதே எதார்த்தம், பணம் சீட்டுகள் என்பதற்காக கொள்கை கோட்பாடு என்பதெல்லாம் காற்றில் மறைந்து போய் லாப நோக்குடன் யாருடனும் யாரும் கூட்டணி சேரலாம் என்பதே இறுதிக் கட்ட நிலவரமாக இருக்கும், அதன் அடிப்படையில் சாதிக்கட்சிகளுக்கும், சின்னச் சின்ன கட்சிகளுக்கும் கூட கடைசி நேரத்தில் மவுசு அதிகரக்கலாம் என்பதே பொதுவான அரசியல் கணக்கு. ■



# கபாலிகான் நியூஸ்

"பூவா தலையா போட்டால் தெரியும் நீயா, நானா பாத்து விடு"என்று பாடிய படியே உள்ளே வந்தார் கபாலிகான்.

"என்ன பாட்டெல்லாம் பலமா இருக்கு"?

"இப்ப இதுதான் ஓடிகிட்டிருக்கு"

"யார் யாருக்குள்ள"?

"எல்லா அரசியல் தலைவர்களுக்குள்ளதான்"

ஒ.. கபாலிகான் முக்கியமான விஷயத்துக்கு வர்றார்னு தெரிஞ்சிகிட்டோம்.

"இந்தாங்க இஞ்சி கஷாயம்...?

"இதில என்னென்ன போட்டிருக்கீங்க?"

"இஞ்சி, மிளகு, சீரகம், தனியா..."

"நிறுத்துங்க..."

"என்னாச்சு?

"ஒண்ணொன்னுக்கும் ஒரு குணம் அது ஒண்ணா சேருமா?அரசியல் மாதிரி....

"வாங்க விஷயத்துக்கு வந்துட்டீங்க"


"ஆட்சி அதிகாரத்தை கிட்டத்தட்ட 4 வருஷமா எடப்பாடியும், கட்சி அமைப்பை ஒ.பி.எஸ்-ம் நடத்திட்டு வர்றாங்க!

"அதான் தெரியுமே?"

"ஆட்சி முடியும் தருவாயில் அடுத்த முதலமைச்சராகனும்னு எடப்பாடி சொல்றார்.. ஆனா ஒ.பி.எஸ் "முடியாது அம்மா இருக்கறப்ப என்னதான் முதலமைச்சராக்கனாங்க""உங்களை முதலமைச்சராக்கனதுசசிகலாதான்னாராம் .."

"இல்லையே இரண்டு பேரையும் சேத்து வச்சது கவர்னர் தானே?ன்னு நாம் கேட்டதுக்கு பதில் சொல்லாம... சிரிச்சுகிட்டே





"இந்த போட்டியால கட்சி இரண்டா பிரிஞ்சு அதிகாரத்தை அனுபவிக்கறவங்க எடப்பாடியாரையும், அதிகாரத்தை அனுபவிக்காதவங்க ஒ.பி.எஸ்-க்கும் ஆதரவு தர்றாங்க"

ஒ..

சில பேரு பாம்பும் போகாம கம்பும் உடையாம பாக்கறா மாதிரி "எங்களுக்குள்ள எந்த கருத்து வேறுபாடும் இல்லைங்கறாங்க"

"பா.ஜ.க தலையிட்டு சேத்து வைப்பார்களா"?

"பிரிச்சதே அவங்கதாங்கறாங்க"

"அடடே!

"தி.மு.கவை தோற்கடிக்க வேற யாரும் வாணாம்... துரைமுருகனே போதும்" ன்னு அடுத்த விஷயத்திற்கு தாவினார் கபாலிகான்!

"என்ன அப்படி சொல்லிட்டீங்க"?

"ஆமாம். துரைமுருகனுக்கு பா.ம.க பாசம் ஜாஸ்தி. அதனால பா.ம.கவை சேர்க்க படாதபாடுபடுவார்... இல்லன்னா பா.ம.க.வுக்கு எதிரான கட்சிகள் தி.மு.க.வுக்கு உள்ள வராம பாத்துப் பாரு.."

"எப்படி சொல்றீங்க?"

போன தேர்தலுக்கு தே.மு.தி.க வர்ற சூழல்ல தன்னை சந்திச்சாங்கங்கறத நிருபருங்க கிட்ட சொல்லிட்டாரு... அதேபோல முதலியார் கட்சியான ஏ.சி.எஸ்.ன் புதிய நீதிக்கட்சியும் சேரவுடாம பண்ணிட்டாரு... காங்கிரஸ் கட்சி கூடுதலாக சீட் கேட்டப்ப" அத்தனை தொகுதியில் நிக்கறதுக்கு ஆள் இருக்கான்னு கேட்டாரு!

"அவர் எப்பவுமே தமாஷா பேசுவாராமே?"

"இதுக்கு முன்ன அப்படி இருந்திருக்கலாம். ஆனா பேராசிரியர் அன்பழகன் இருந்த பதவியில் அந்த பதவிக்கு வரும் போது அன்பழகனுக்குரிய பக்குவம் வரவேண்டாமான்னு கட்சிக்காரங்களே வருத்தப்படறாங்க!

"மாஸ்க் போட்டதால் வார்த்தை மாறியிருக்குங்கறாரே"

"நான் இவ்வளவு நேரம் மாஸ்க் போட்டு தானே பேசினேன்." என்று மாஸ்க்கை கழட்டிவிட்டு சிரித்துக்கொண்டே வெளியேறினார் கபாலிகான். ■



# அடுத்த வருஷம் 'அண்ணாத்தே' அரசியலுக்கு வருவார்!

**தமிழக அரசியல் களத்தில் பல ஆண்டுகளாகவே ஒரு கேள்வி இருந்து வருகிறது, அதற்குரிய விடை யாருக்குமே தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றே சொல்ல வேண்டும்.**

திரைப்பட ரசிகர்கள் தொடங்கி அரசியல் வாதிகள் வரையில் உள்ள கேள்வி ரஜினி அரசியலுக்கு வருவாரா மாட்டாரா? என்பதாகவே உள்ளது .

ரஜினியின் அரசியல் பிரவேசம் பற்றி அரசியல் உலகம் இத்தனை ஆர்வமாக இருப்பதற்கு என்ன காரணம்?

1996 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் ரஜினியின் ஒரே ஒரு வேண்டுகோள் தமிழக அரசியலையே புரட்டிப் போட்டது.

அன்று ரஜினி நினைத்திருந்தால் அவர்தான் முதலமைச்சர், ஆனால்.. அரசியல் சாணக்கியரான கருணாநிதி அதை மிகச் சரியாக பயன் படுத்தி மூப்பனாரின் செல்வாக்குடன் முதல்வரானார்.

ரஜினிக்கு பதவி ஆசை என்று



## பிரபல ஜோதிடர்
# பரணிதரன் கணிப்பு...

ஒன்றிருந்திருக்குமேயானால் அன்று ரஜினியே முதல்வராகி இருக்க முடியும்... ரஜினியின் ஒரே ஒரு வார்த்தை.. ஒரே ஒரு வேண்டுகோள் 96 தேர்தலில் தி.மு.க.வை ஆட்சியில் அமர வைத்தது, அதன் பிறகு ரஜினியால் பதவிக்கு வந்தவர்கள் அவரைக் கண்டு கொள்ளவில்லை என்பதுடன், அரசியலில் நாம் தவறு செய்து விட்டோமோ என்று ரஜினியே நினைக்கும் அளவிற்கு அன்றைய ஆட்சியின் செயல்பாடுகள் அவரை யோசிக்க வைத்து விட்டது.


அது முதல் அரசியல் என்றால் என்ன என்பது ரஜினிக்கு நன்றாகவே புரிந்து விட்டது, தமிழக அரசியல் களத்தில் தி.மு.க.வையும் அ.தி.மு.க.வையும் எதிர்த்து அரசியல் செய்வது, குறிப்பாக ஜெவையும் கருணாநிதியையும் எதிர்த்து அரசியல் செய்வது சாத்தியமில்லாத ஒன்று என்பதை உணர்ந்தார், வைகோவும் விஜயகாந்தும் கட்சி ஆரம்பித்தபோது அவர்கள் கண்ட எழுச்சியையும் அதன்பின் அவர்கள் செல்லாக்காசாகி, அவர்கள் பின்னால் சென்றவர்கள் எல்லாம் தி.மு.க., அ.தி.மு.க.வின் வலைக்குள் சிக்கியதையும் பார்த்த ரஜினி, அவர்கள்போல் அவசரப்பட்டு கட்சி ஆரம்பித்து வீணாகிப் போகவும் விரும்பவில்லை, தனது ரசிகர்களை நடுத்தெருவில் நிறுத்தவும் விரும்பவில்லை.

இதை எல்லாம் சமீபத்தில் வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார் ரஜினி.

இன்றைய அரசியல் களத்தில் ஜெவும் இல்லை, கருணாநிதியும் இல்லை, இப்போதாவது ரஜினி அரசியலுக்கு வருவாரா? அல்லது வழக்கம் போல் வருகிறேன் வருகிறேன் என்று சொல்லிக் கொண்டே அரசியலுக்கு வராமல் போய் விடுவாரா?

இது பற்றி எந்த இடத்திலும் இருந்து முழுமையான விடை கிடைக்காமல் போனதால் பிரபல ஜோதிடரான பரணிதரன் அவர்களிடம், ரஜினியின் ஜாதகத்தை வழங்கி நம்முடைய கேள்வியை அவர் முன் வைத்தோம்.....

"ரஜினி திருவோணம் முதல் பாதத்தில், மகர ராசியில், சிம்ம லக்கினத்தில் பிறந்தவர், பிறக்கும் போது சந்திர மகாதிசை.. 17.05 2020



ஓம் நமச்சிவாய
ஜெனனீ ஜென்ம ஸௌக்கியானாம் வர்தனீ குல சம்பதாம்
பதவி பூர்வ புண்யானாம் லிக்யதே ஜென்ம பத்திரிகா

28-09-2020

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ரஜினிகாந்த் | பிறந்த ஊர் | : Bangalore KAR. India. |
| தந்தை பெயர் | : | அட்சாம்சம்/தீர்க்காம்சம் | : 13:00 N / 077:35 E |
| தாயார் பெயர் | : | ஜன்ம நட்சத்திரம் | : திருவோணம் பாதம் 1 |
| பிறந்த தேதி | : 12-12-1950 செவ்வாய் | ஜன்ம ராசி | : மகரம் |
| தமிழ் தேதி | : விக்ருதி கார்த்திகை 27 | ஜன்ம லக்னம் | : சிம்மம் |
| பிறந்த நேரம் | : 11:54:00 PM (GMT 06:24:00 PM) | திதி | : (சுக்ில) சதுர்த்தி |
| நட்சத்திர ஹோரை | : 04:57:51 | யோகம் | : துருவம் |
| சூரிய உதயம் | : 06:35:34 AM (பிம்ப மத்தி) | கரணம் | : பத்திரை |
| சூரிய அஸ்தமனம் | : 05:50:40 PM (பிம்ப மத்தி) | அயனம் | : தட்சிணாயனம் |
| நேர திருத்தம் | : Standard Time (No Correction) | நேர மண்டலம் | : 05.30E Indian Standard Time |
| உதயாதி நாழிகை | : 43 நாழிகை 16 விநாழிகை 05 தர்பரை 12/12/1950 செவ்வாய் | | |

வாக்கிய கிரக ஸ்புடம் (நிராயனம்)

| கிரகம் | பாகை | நட்சத்திரம் | பாதம் | கிரகம் | பாகை | நட்சத்திரம் | பாதம் |
|---|---|---|---|---|---|---|---|
| சூரியன் | 236 54 44 | கேட்டை | 4 | சனி | 156 21 30 | உத்திரம் | 3 |
| சந்திரன் | 280 45 22 | திருவோணம் | 1 | ராகு | 329 41 44 | பூரட்டாதி | 3 |
| செவ்வாய் | 277 28 24 | உத்திராடம் | 4 | கேது | 149 41 44 | உத்திரம் | 1 |
| புதன் | 251 37 31 | மூலம் | 4 | மாந்தி | 068 34 44 | திருவாதிரை | 1 |
| குரு | 308 52 45 | சதயம் | 1 | லக்னம் | 141 33 29 | பூரம் | 3 |
| சுக்கிரன் | 242 51 39 | மூலம் | 1 | | | | |



பாவக மாற்றம் : சுக்கிரன்(விருச்சிகம்) சனி(சிம்மம்)
ஜனன கால தசை இருப்பு : சந்திரன் 9 வருடம் 5 மாதம் 5 நாள்
நடப்பு தசா புக்தி முடிவு தேதி : புதன் தசா புதன் புக்தி 14-10-2022
நியுமராலஜிப்படி பெயரின் கூட்டு எண் : 14-23-41-50-27-36-45-21-39
நட்சத்திரப்படி பெயரின் முதல் எழுத்து : ஜூ - ஜே - ஜோ - கா - (க)
சுபம்

முதல் புதன் மகாதிசை ஆரம்பமாகியுள்ளது,

புதன் மகாதிசை 17 ஆண்டுகளாகும்.

ரஜினியின் பிறப்பு ஜாதகம் கால சர்ப்ப தோஷ அமைப்புடைய ஜாதகமாகும், இத்தகைய அமைப்பு உடையவர்களுக்கு 32 வயதிற்கு மேல்தான் வாழ்க்கையில் முன்னேற்றம் என்று சொல்லலாம், இது ஒரு பக்கம் இருக்க 1960 க்குப் பின் அவருக்கு செவ்வாய் மகாதிசை நடக்க ஆரம்பித்துள்ளது.

அக்காலத்தில் அவருடைய நிலை அவருடைய குடும்பத்தின் நிலை நன்றாக இருந்திருக்கும், 1967 முதல் அவருடைய 16 வயதிற்கு மேல் அவருக்கு ராகு மகா திசை ஆரம்பமாகியுள்ளது, ராகு திசை 18 வருடங்கள் ஆகும், இக்காலத்தில் அவருடைய நிலை அவர் மனம் போனாற்போல், மற்றவர்கள் என்ன சொல்வார்கள் என்று யோசித்துப் பார்க்க முடியாமல், ஊர் விட்டு ஊர், நண்பர்களுடன் அரட்டை, மனம் போன போக்கில் வாழ்க்கை, மற்றவர்களால் விமர்சிக்கப் படுதல் என்று அவருடைய நிலை இருந்திருக்கும்.

1985-க்குப் பிறகுதான் அவருக்கு சமூக அந்தஸ்து, மரியாதை, புகழ், செல்வாக்கு என்று அனைத்தும் உண்டாகி இருக்கும், அது நிலைத்திருக்கும், அதற்கு காரணம் சிம்ம லக்கினத்திற்கு பூர்வ புண்ணியாதிபதி குரு பகவான்தான், பூர்வ புண்ணியாதிபதியான குரு பகவான் லக்கினத்திற்கு ஏழில் அமர்ந்து லக்கினத்தையே பார்த்ததும் 1985 முதல் 2001 வரை அவருக்கு குரு திசை நடந்ததும் அவரை அக்காலத்தில் மகா சக்தியாக உருவெடுக்க வைத்தது.

குரு திசை அவருக்கு நடந்த காலத்தில்தான் 1996 ல் அவருக்கும் முதல்வராகும் யோகம் இருந்தது, அவர் யாரை நோக்கி கை நீட்டுகிறாரோ அவருக்கும் முதல்வராகும் யோகம் இருந்தது, அதன் காரணமாகவே 1996 தேர்தலில் அவர் கை காட்டிய தி.மு.க.அணி வெற்றி பெற்று கருணாநிதி முதல்வரானார்.

அதன்பிறகு, 2001 முதல் 2020 மே மாதம் வரை அவருக்கு சனி மகா திசையின் காலம், சிம்மத்திற்கு சனி பகைவர் என்பது பொதுவான விதி, சிம்ம லக்னத்திற்கு 6 க்கும் 7 க்கும் அதிபதியான சனி பகவான் அவருடைய குடும்ப ஸ்தானத்திலேயே அமர்ந்ததன் மூலம் குடும்ப வழியாக சில சங்கடங்களை, அமைதியின்மையை அவர் சந்திக்க நேர்ந்தது, பொதுவாக சனி மந்தக் காரகன் என்று கூறப்படுபவர்.

அவர் லக்னத்திற்கு இரண்டிலும் ராசிக்கு ஒன்பதிலும் அமர்ந்த காரணத்தினால் பாக்கியம் தடைப்படாமல் தொடர்ந்து கொண்டிருந்தது என்றாலும் அடிக்கடி குழப்பம் அதன் காரணமாக தனிமை என்ற நிலைக்கு அவர் போக வேண்டி இருந்தது.


அவருடையஜாதகத்தில்ஜென்மத்திலிருக்கும் கேது பகவான் அவருக்குள் ஞான நிலையை உருவாக்க, ஏழாம் இடத்திலிருந்து லக்கினத்தைப் பார்க்கும் குரு பகவான் அறிவாற்றலை வழங்க எந்த நேரத்தில் எதை செய்தால் சரியாக இருக்கும் என்பதை உணர்ந்து செயல்படக் கூடிய நிலையை அவர் அடைந்துள்ளார்.

அதன் காரணமாகவே சனி திசை நடைபெற்ற இந்த 19 ஆண்டு காலமும் அரசியல் பயணத்தை ஒத்தி வைத்துக் கொண்டே இருந்தார் ரஜினி.

இப்போது, 17.05.2020 முதல் ரஜினிக்கு புதன் மகாதிசை ஆரம்பமாகியுள்ளது, சிம்ம லக்னத்திற்கு 2 க்கும் 11 க்கும் அதிபதியானவர் புதன், அவர் லக்னத்திற்கு 5 ல் குரு பகாவனுடைய வீட்டில் நட்பாக அமர்ந்து அவருடைய லாப ஸ்தானத்தையே அவர் பார்ப்பதும், பூர்வ புண்ணிய பலத்தின் காரணமாகவும் இக்காலம் அரசியலுக்காக அவர் எதிர்ப்பார்த்த காலமாக அமையப் போகிறது.

அதே பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் இருந்துதான் திரைத்துறைக்குரிய யோகத்தை, செல்வாக்கை சுக்கிர பகவானும் இவருக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார், இனி வரும் காலத்தில் செய்திகளில் இவருடைய பெயரே முதன்மையாக இருக்கும், வேகம், ஆவேசம் போன்றவற்றிற்கு காரகனான செவ்வாய் இவருக்கு உச்சமாகி இருப்பதும், லக்கினாதிபதி சூரியன் நான்கில் கேந்திரம் ஏறி இருப்பதும் இப்போதிருந்தே அரசியலில் அவரை ஈடுபட வைக்கும் சூழ்நிலை உருவாகும்.

ஆன்மிக சக்தி கொண்டு அறிவாற்றலுடன் அரசியலில் ரஜினி அடியெடுத்து வைக்கும் காலம் உருவாகி விட்டது என்றே சொல்வேன்" என்கிறார் பிரபல ஜோதிடரான பரணிதரன். ■



13.09.2020 சென்னை அயன்புரம் ஸ்ரீ சக்தி பார்ட்டி ஹாலில் நடைபெற்ற சென்னை நம்மாழ்வார்பேட்டை திரு.எல்.எஸ்.பாலசுந்தரம் – பா.காந்திமதி இணையரின் மகள் பா.ராஜலட்சுமி எம்.எஸ்சி., – மு.ரமேஷ் எம்.எஸ்சி., (ராமநாதபுரம் மாவட்டம், தொண்டி வி.எல்.முத்து – மு.பானுமதி இணையரின் மகன்)க்கும் நடைபெற்ற திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் மித்ரா டைம்ஸ் ஆசிரியர் எம்.எஸ்.மூர்த்தி கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் திரு.சாமிக்கண்ணு (தி.மு.க.பகுதிச் செயலாளர்), திரு .சந்திரசேகர் (திரு.வி.நகர் அம்மா பேரவைச் செயலாளர்), திரு.ஸ்ரீதர் (அ.தி.மு.க), திரு.பாலு (தி.மு.க.), அசோக் லேலண்ட் திரு.ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

# ஆசை அளவோடு!

**மனிதனாய்ப் பிறந்த அனைவருக்கும் சிற்சில ஆசைகள் இருக்கும். ஆசைகள் வேறுபட்டு காணப்படும். ஒருவருக்கு மகிழுந்து வாங்கப் பிடிக்கும், இன்னொருவருக்கு இருசக்கர வாகனம் வாங்கப் பிடிக்கும்.**

நமது ஆசை ஒன்று நிறைவேறி விட்டால், மனம் இன்னொரு ஆசைக்கு ஏங்கும். அதுதான் மனிதனது இயல்பு. ஆசைகள் இருக்கத் தான் வேண்டும். அதுவே நமக்கு இயலாத, நடக்காதவற்றுக்காக ஆசைப்படக் கூடாது...

அவன் பெரிய வீடு கட்டுகிறான். அவனைப் போல நானும் கட்ட வேண்டும் என்று நாம் ஆசைப்பட்டால், அது நம்மால் முடியுமா...? என சற்று ஆலோசிக்க வேண்டும்...

அவனிடம் கோடி,கோடியாக பணம் இருக்கிறது செலவழிக்கிறான். நம்மால் முடியுமா...?

நமக்கு ஏற்ப, நமது தகுதிக்கு ஏற்ற, இயல்வனவற்றிற்கு ஆசைப்படலாம். நமது விரலுக்கு ஏற்ற வீக்கம். அதுபோலத் தான் நாமும் வாழப் பழக வேண்டும்...

பெண்கள் ஆசைப்படுவது, கூடுதலாக நகை, உடைகள் வாங்கும் செயலில் தான். அது பேராசையாக மாறுகிறது...

கட்டிய வீட்டிலும், உடுத்தும் உடைகளிலும், வாழ்கின்ற வாழ்விலும் சரி, இருப்பதை வைத்து நாம் நிறைவடைவதில்லை. இல்லாத ஒன்றிற்காக ஆசைப்படுகிறோம். பேராசைப்படுகிறோம்...

மற்றவர்களிடம் இருக்கும், அவர்கள் வைத்திருக்கும் பொருட்கள் மீது மனம் ஆசைப்படுகிறது. ஏனையோரிடம் நாம் நம்மை ஒப்பிடுகிறோம். அவர்களது ஆடம்பரமான வாழ்க்கை நம்மையும் அதில் ஈடுபட வைக்கிறது...

நாம் எப்போதுமே நமக்கு மேல் உள்ளவர்களுடன் ஒப்பிடுவதை விட்டு விட்டு, நமக்குக் கீழே இருப்பவரைக் கண்டு நிறைவு கொள்ள வேண்டும்..

ஆம்!, ஆசை நல்லதா...? கெட்டதா...?


அளவான ஆசை அனைத்தும் நல்லதே. நம்மால் நம் தகுதிக்கு (உடல், மனம், பணம்) உட்பட்ட ஆசை நல்லது...

அளவிற்கு அதிகமான, எண்ணற்ற ஆசைகள், நம் தகுதிக்கு மேற்பட்ட ஆசை அனைத்துமே நம் வாழ்க்கைக்கு தீங்கு விளைவிப்பவை. இவை அனைத்தும் நம் அமைதியினைக் கெடுப்பவை...

எந்த ஒன்றின்மீது ஆசை வருகிறதோ, அந்தப் பொருளின்றி, வாழமுடியாதா...? என்று எண்ணினால் ஆசைப்படுபவை வேண்டாம் என்றே அடிமனம் கூறும்...! எவ்வளவு பொருள்களிலிருந்து விலகுகிறோமோ அவ்வளவு துன்பம் குறையும்!

ஆசை இல்லாத உயிர்கள் இல்லை, அதிக ஆசை உள்ள உயிர்கள் நிம்மதியாக வாழ்வதும் இல்லை, எனவே நமக்கு ஆசை இருக்க வேண்டும். அதுவே பேராசையாக இருக்கக் கூடாது. ■

Owned and Published by **M.SUNDARAMOORTHY** from No.602 Suruthi Block, Chitra Avenue, 9, Choolaimedu High Road, Chennai-600 094. and Printed by him at **SRI PADMALAYA PRINTERS**, No.8/18, Manali Salai, Korukkupet, Chennai-600 021. Editor : **M.SUNDARAMOORTHY**




# கலாமின் கனவுகள் அறக்கட்டளை

Regn no.171/2019

## அய்யா டாக்டர் அப்துல்கலாம்

### அவர்களின் 89வது பிறந்தநாள்!

15-10-2020











இளைஞர்களின் முன்னோடி... குடியரசு முன்னாள் தலைவர், ஐயா அப்துல் கலாம் அவர்களின்
பிறந்தநாளில் அவரைப் போற்றி வணங்குவோம். மாணவர்களுக்கு ஊக்கம் தந்து...
குழந்தைகளுக்கு அன்பைத் தந்து... இளைஞர்களுக்கு எழுச்சி தந்து... மதம் மொழி இனம் கடந்து...
தலைமுறை தாண்டி மனிதம் வாழ கற்றுத் தந்த அப்துல் கலாம் பெயரல்ல...
அக்னி சிறகின் ஏவுகணை..!
அவர் வழியில்.. என்றும் மக்கள் நலப்பணியில்...


திருமதி. டாக்டர். **வைதேகி ஸ்ரீதரன்** நிறுவனர், தலைவர்

எண். 4, வினு ஹோம்ஸ், பாரத் அவென்யூ, 2வது குறுக்குத் தெரு, சிபிஐ காலனி,
மேடவாக்கம், சென்னை – 600 100. தொலைபேசி: 75500 66361

MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/2019-2021
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month
WPP Licence No.(Inland) TN/PMG(CCR)/WPP/609/2019-2021

